REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மார்ச் 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 68 | Tuesday 21, March, 2023 | 12 பக்கங்கள் | 50/-




சர்வதேச தரத்தில் கல்வியை அமுல்படுத்த திட்டம்;

## மார்ச் 30 முதல் முதலாம் ஆண்டு வகுப்புக்கு ஆங்கில மொழி பேச்சு

லோரன்ஸ் செல்வநாயகம்



மார்ச் 30ஆம் திகதி முதல் முதலாம் ஆண்டின் அனைத்து வகுப்புகளிலும் ஆங்கில மொழி பேச்சு செயற்பாடுகளை உபயோகப்படுத்தும் திட்டத்தை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதேவேளை எதிர்காலத்தில் 04

## IMF அனுமதியுடன் டொலர் நெருக்கடி முடிவுக்கு வரும்

மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனாக கிடைக்கும் 2.9 பில்லியன் நிதிக்கான அனுமதியுடன் நாட்டில் தற்போது நிலவும் டொலருக்கான நெருக்கடி முடிவுக்கு வரும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். நாட்டுக்கு அத்தியாவசியப் 04

## தேர்தல் திகதி நிர்ணயிப்பதற்கு முன் சூழலை தயார்படுத்துவது அவசியம்

இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு திகதியை நிர்ணயிப்பதற்கு முன்பதாக அதற்குத் தேவையான சூழலை தயார்படுத்திக் கொள்வது அவசியமென மாகாண சபைகள் உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்துள்ளார். அதேவேளை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தேவையான நிதியை உரிய வகையில் 04

நாடளாவிய ரீதியாக 95,000 மாணவர்களை உள்ளடக்கியதாக

# 835 ஆரம்ப பாடசாலைகளின் மாணவருக்கு அமெரிக்கா உதவி

770 மெற்.தொன் அரிசி, 100 மெற்.தொன் மரக்கறி எண்ணெய்யும் வழங்குகிறது

**அமெரிக்காவின் நிதி உதவியின் கீழ் செயற்படும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போசணை வேலைத்திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்கத் தூதுவர் கண்காணிப்பு விஜயம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டிலுள்ள 835 ஆரம்பப் பாடசாலைகளில் கல்விகற்கும் 95,000 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு புரோட்டீன் போசனையை பெற்றுக்கொடுக்கும் வகையில் 770 மெற்றிக்தொன் அரிசியை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. அதுதொடர்பில் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 04



ஊடகவியலாளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக

# IMF தீர்மானம் இன்று காலை அறிவிக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் தொடர்பான தீர்மானம் இன்று வெளியிடப்படவுள்ளதுடன் அத்தீர்மானத்தை இலங்கை நேரப்படி மு.ப. 8.30 மணிக்கு ஊடக சந்திப்பொன்றின் மூலம் உத்தியோகபூர்வமாக அந்நிதியம் வெளியிடவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் தொடர்பில் சர்வதேச 04



**பதுளை, செங்கலடி வீதியில் 40 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து**
ஹொப்டன் ஆசிரியர் பரணிதரன் விபத்தில் பலி 03

கணவன் – மனைவிக்கிடையே தகராறு

## விசாரணைக்கு சென்ற பொலிசார்மீது கணவன் கடும் தாக்குதல்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறு தொடர்பில் விசாரணைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நடத்தப்பட்ட பாரிய தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட இரண்டு பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பு போதனா 04

## நெற் செய்கையாளர்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்க 36,000 மெ.தொன் உரம்

விவசாய அமைச்சிடம் கையளிப்பு

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரமைப்பின் (USAID) நிதியுதவில் வழங்கப்பட்ட 36,000 மெற்றிக் தொன் உரத்தை சிறுபோகத்துக்காக ஐ.நா. உணவு, விவசாய ஸ்தாபனம் விவசாய அமைச்சிடம் கையளித்துள்ளது. ஏப்ரல் ஆகஸ்ட் மாதங்களுக்கிடையிலான சிறுபோகத்துக்கும், அதற்கு அடுத்து வரும் பயிர்செய்கைப் போகங்களிலும் ஒரு மில்லியனுக்கும் அதிக நெல் 04




நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை

## 62 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் பாதிப்பு 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பண்டாரவளை லியன்கங்கவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ள மண்சரிவினால் 04






**இலங்கை தமிழருக்கு ரூ.223 கோடியில் 3,949 புதிய வீடுகள்**
தமிழக அரசின் பட்ஜட்டில் அறிவிப்பு 03



**முட்டை விலை இன்னும் ஒரு வாரத்தில் குறையும்**
உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு 03



**பூனாகலையில் பாரிய மண்சரிவு 40 வீடுகள் சேதம், 07 பேர் காயம்**
62 குடும்பங்கள் இடம்பெயர்வு 10

வேட்பாளர்களான 3000 க்கும் மேற்பட்ட

## அரசாங்க ஊழியர்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கவும்



வாசுதேவ, வலேபொட ஆகியோர் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்பாளர்களாக வேட்புமனு தாக்கல்செய்துள்ள 3000 க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, காமினி வலேபொட ஆகியோர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதற்கு நியாயமான தீர்வொன்றை விரைவாக பெற்றுக்கொடுக்குமாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி மேற்படி 04



தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று லேக்ஹவுஸ் நிறுவனத்தின் lower board roomயில் தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆண்டு விழா கேக்கை பிரதம ஆசிரியர் வெட்டுவதையும் ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர, நிதிப் பணிப்பாளர் பேராசிரியர் அரேந்திர காரியவசம், சட்டப் பணிப்பாளர் ஜனக்க ரணதுங்க, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல,நிறுவன செயலாளர் உட்பட நிறுவன பத்திரிகைகளின் ஆசிரியர்களும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். (படம் சான் ரூபஸ்சர, வாசித்த பட்டபெந்திகே)

பூனாகலை, கபரகலையில் மண்சரிவு



## பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து வசதிகளையும் உடன் செய்யுங்கள்

அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்பு

பண்டாரவளை, பூனாகலை கபரகலை தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உடன் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், மண்சரிவு சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து தமக்கு விரிவானதொரு அறிக்கையை முன்வைக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளிடம் அமைச்சர் நேற்று வலியுறுத்தினார். இவ்வனர்த்தம் தொடர்பில் நேற்று அமைச்சரவைக் கூட்டத்திலும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரஸ்தாபித்துள்ளார். அதன் மூலம் மக்களுக்கு தேவையான அடுத்தக்கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மண்சரிவு ஏற்பட்டுள்ளதென்பதை 04

## நுவரெலியாவில் 'தொதல்' பொதிக்குள் இறந்த எலி



நுவரெலியா நல்லதண்ணி பகுதியில் இனிப்பு பண்டங்களை விற்பனை செய்யும் நிலையமொன்றில் கொள்முதல் செய்த 'தொதல்' பொதியொன்றில் இறந்த எலியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விடுமுறை நாட்களில் இலட்சக்கணக்கானோர் சிவனொளி பாதமலைக்கு செல்வது வழக்கம்.

சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்களாக வருகைத் தந்தவர்கள் நல்லதண்ணி நகரிலுள்ள இனிப்பு பண்டங்கள் விற்பனை நிலையமொன்றில் 04


## அரை சொகுசு பஸ் சேவை ஏப்ரல் மாதம் முதல் இரத்து



அரை சொகுசு பஸ் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியிலிருந்து இரத்துச் செய்யப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அரைச் சொகுசு பஸ்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இந்த பஸ்களுக்கும் சாதாரண பஸ்களுக்கும் வித்தியாசம் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை தடுப்பதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

# தினகரனின் 91ஆவது ஆண்டு விழா கொண்டாட்டம்





















தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு விழா நேற்று லேக்ஹவுஸ் நிறுவனத்தின் lower board roomயில் தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கேக் வெட்டப்பட்டு பணிப்பாளர் சபையினர் கௌரவிக்கப்பட்டதுடன் தினகரன் பத்திரிகையுடன் இணைந்து சமூகத்துக்கு பெரும் பங்காற்றிய பெருந்தகைகளும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். விழாவில் நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட, ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர, நிதிப் பணிப்பாளர் பேராசிரியர் அரேந்திர காரியவசம், நீதிப் பணிப்பாளர் ஜனக்க ரணதுங்க, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, நிறுவன செயலாளர் மற்றும் டேய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியர் ஜயந்த சிறி நிசங்க, தினமின ஆசிரியர் மனோஜ் அபேதீர, சன்டே ஒப்சேர்வர் ஆசிரியர் பிரமோட் டி சில்வா, சிலுமின ஆசிரியர் தர்மன் விக்கிரமரட்ண, தினகரன் ஊழியர்கள், லேக்ஹவுஸ் ஊழியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**படங்கள்: சான் ரூபஸ்சர, வாசித்த பட்டபெந்திகே**









## தவக்கால சிந்தனை



### நன்மை செய்வோரை தட்டிக் கொடுப்போம்

**யோவான் 5: 1 – 16**

தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் நாம் பயணிக்கின்றோம்.

பல்லாண்டு காலமாக நோயோடு உள்ள நபர்களை இயேசு தொட்டு குணமாக்கும் சம்பவங்களை இன்றைய நற்செய்தியின் ஊடாக காணக்கிடைக்கின்றன.

இயேசு யூதர்களின் விழாவொன்றுக்காக மீண்டும் எருசலேம் நோக்கி செல்கின்ற நிகழ்வோடு இன்றைய நற்செய்தியானது ஆரம்பிக்கின்றது.

தொடர்ந்து வரவுள்ள மூன்று நாட்களுக்கு யோவான் நற்செய்தியின் ஐந்தாவது பிரிவிலிருந்து நற்செய்திப் பகுதியானது இறைவார்த்தையாகத் தரப்படவுள்ளது.

இன்றைய முதலாவதுபிரிவில் எருசலேமிலுள்ள பெத்சதா (இரக்கத்தின் இடம்) என்கிற குளத்தடியில் இயேசுநிற்கின்றார். அங்கே பல பிணியாளர்கள் தண்ணீர் கலங்குவதற்காகவும்,அவ்வாறுகலங்கும்போது அந்தக் குளத்தில் இறங்கி சுகம் பெறவும் ஆண்டுக் கணக்காக காத்துக் கிடக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் முப்பத்தெட்டு ஆண்டுகளாக முடக்குவாதத்தால் பாதிப்புற்றவனும் ஒருவன். அவனுக்கு இயேசுசுகமளிக்கின்றார்.

இங்கு இயேசு சுகமளித்தது பிரச்சனையல்ல,மாறாக அவர் சுகமளித்த நாள் ஓர் ஓய்வு நாளாகும். இதனை யூதர்களும்,யூதத் தலைமைகளும் எதிர்க்கின்றனர். அடிமைகளுக்கு ஓய்வளித்து இறைவனோடு ஒன்றிக்க விடுமுறையாக அறிவிக்கப்பட்ட ஓய்வு நாள் பிற்காலத்தில் யூதத்தலைமைகளின் பிழையான புரிதல்களால் மக்களையே அடிமையாக்குகின்ற நாளாக மாறுகிறது. இதனையே இயேசு கண்டிக்கின்றார். 'ஓய்வுநாள் மனிதர்களுக்காகவேயன்றி,மனிதர்கள் ஓய்வுநாளுக்காகவல்ல'என்றுஎடுத்துரைத்து அந்நாளிலும் நன்மைசெய்கிறார்.

தவக்காலமதில் நன்மை செய்பவர்களைத் தட்டிக் கொடுப்போம். காலம், நேரம் கருதாது அடுத்தவருக்கு நன்மை செய்வோம்.

அருட்தந்தை நவாஜி...

# எரிபொருளுக்குப் பதிலாக மின்சார வாகனம் நாட்டில் விரைவில் அறிமுகம்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்காலத்தில் போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களின் ஒரு அம்சமாக எரிபொருளுக்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கக்கூடிய வாகனங்களை அறிமுகப்படுத்துவதாகும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகளுக்கான பாதுகாப்பான வாகன ஓட்டுதல் தொழில்நுட்பம் சம்பந்தமான பயிற்சி வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி செயலமர்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இலங்கை போக்குவரத்து சபையை நட்டமீட்டாதவகையில் முன்னெடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு அதன் ஊழியர்களுக்கே உரியது.



சுதந்திரத்திற்குப் பின்னர் நாடு தற்போது மிக தீர்க்கமான ஒரு காலகட்டத்தில் காணப்படுகிறது. மக்கள் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்கள் பல்வேறு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்படாமல் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்தையும் அரசாங்கம் முன்னெடுக்கும். அரசியல் மேடைகளில் பேசுவது போன்று அரசாங்கத்தை முன்னெடுப்பதென்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறானால் எம்மால் இழக்கப்படுவது நபர்களோ அல்லது அரசியல் கட்சிகளோ அன்றி எமது நாடேயாகும்.

வளர்ச்சியடைந்து வரும் உலகத்தோடு நிலவும் பொருளாதார நெருக்கடியோடு ஒப்பிடுகையில் எப்போதும் நவீன தொழில்நுட்ப முறைமையின் கீழ் முன்னோக்கிச் செல்லவேண்டியது அவசியமாகவுள்ளது. அந்த வகையில் தற்போது பயணிகளின் பஸ் கட்டணம் அறவிடுவதற்காக இணையம் மற்றும் ஒன்லைன் மூலமான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான முன்னோடி நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வருடத்திற்கு 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான நிதியில் எரிபொருளை உபயோகிப்பதற்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கக்கூடிய பஸ் வண்டிகள் மற்றும் ரயில்களை அறிமுகப்படுத்துவது தொடர்பில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

எதிர்காலத்திற்கான தற்போதைய மாற்றங்களாக அதைக் குறிப்பிட முடியும்.

வாகன விபத்துக்கள் தொடர்பில் குறிப்பிடும்போது, நாளாந்தம் 10 விபத்துக்களாவது இடம்பெறுகின்றன. வருடாந்தம் 3000 க்கு மேற்பட்டோர் விபத்துக்களால் மரணமடைகின்றனர். அந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு பாதுகாப்பாக வாகனத்தை செலுத்துதல் தொடர்பில் தொழில்நுட்ப முறைமையொன்றை சாரதிகளுக்கு பயிற்சியாக வழங்கப்படுகின்றன. இது மிகவும் அவசியமானதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதுளை, செங்கலடி வீதியில் 40 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து

## ஹொப்டன் ஆசிரியர் விபத்தில் பலி



பதுளை செங்கலடி வீதியின், பசறை 13 ஆவது மைல்கல் பகுதியிலிருந்து பயணத்தை ஆரம்பித்த காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 40 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரில் பயணித்த ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று (20) காலை 7.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த ஆசிரியர் பரணிதரன் (வயது 39) பசறை கல்வி வலயத்திலுள்ள ஹொப்டன் கலைமகள் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி வருவதுடன், பாடசாலைக்கு புறப்பட்டுச் சென்ற போதே இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் பசறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பசறை பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு இதே நாளில் பஸ் விபத்துக்குள்ளாகி 13 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாக பிரதேச மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

# இலங்கை தமிழருக்கு ரூ.223 கோடியில் 3,949 புதிய வீடுகள்

## தமிழக அரசின் பட்ஜட்டில் அறிவிப்பு



இலங்கை தமிழருக்கு 3,949 வீடுகள் 223 கோடி செலவில் கட்டடப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக சட்டசபையில் 2023 – 2024ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் வரவு செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சமர்ப்பித்தார்.

இதன்போதே நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# டொலரின் ஏற்ற இறக்கம் தங்கத்தின் விலைவீழ்ச்சி



தங்கத்தின் விலை கடந்த வெள்ளிக்கிழமை 22 கரட் தங்கம் 1,72, 500 ஆக காணப்பட்டபோதும் நேற்று (20), 1,65,000 ஆக குறைந்துள்ளது.

டொலரின் விலை ஏற்ற இறக்கத்தையடுத்து, தங்கத்தின் விலையிலும் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

# ஐ.த.ஊ சங்கத் தலைவராக ஹிருணிகா நியமனம்



அகில இலங்கை ஐக்கிய தனியார் ஊழியர் சங்கத்தின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்களின் தொழில்முறை உரிமைகளுக்காக முன்வருதலுக்கும் அவர்களை வலுவூட்டுவதற்கும் பலப்படுத்துவதற்கும் அகில இலங்கை ஐக்கிய தனியார் ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு, திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திர அதன் முதலாவது தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் 04

# ஆசீர்வாதக் கூட்டங்களில் மக்கள் பங்கேற்பு

**(தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்)**

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள டொக்டர் போல் தினகரன், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் ஆசிர்வதிக்கும் கூட்டங்களில் பங்கேற்றார்.

கொழும்பு விகாரமஹாதேவி உள்ளக அரங்கில் நடைபெற்ற ஆராதனை நிகழ்வில் கொழும்பில் வாழும் பெருந்தொகையான மக்கள் கலந்து ஆசிரிவாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், போல் தினகரனின் குடும்ப உறுப்பினர்களும், கலந்து கொண்டதுடன், திருமதி போல் தினகரனின் நூலொன்றும் இங்கு வெளியிடப்பட்டது.

# கடுமையான நிபந்தனைகளுடன் 12 தமிழக மீனவர்கள் விடுவிப்பு

## யாழ். இந்திய துணை தூதரகத்தில் ஒப்படைப்பு



யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 12 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்ட நிலையில் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

மீனவர்களை ஒன்றரை வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனையின் கீழ் விடுவிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் 04

# முட்டை விலை இன்னும் ஒரு வாரத்தில் குறையும்

## உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு

முட்டையின் விலை அடுத்த வாரத்தின் பின்னர் குறைவடையுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் முட்டைகளை கையிருப்பில் வைத்திருப்பதால், தற்போது சந்தையில் முட்டை தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் முட்டை உற்பத்தியாளர்களிடமிருந்து முட்டைகளை வாங்கி சேமித்து வைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த முட்டைகளை கிட்டத்தட்ட ஒரு வருடம் குளிர்சாதன பெட்டியில் வைக்கலாமென்றும் ஒரு முட்டையை 72 மணி நேரம் வெளியில் வைக்கலாமென்றும் கூறினார்.

சந்தையில் தற்போது ஒரு முட்டை 55 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை விற்கப்படுவதாகவும் மார்ச் 25ஆம் திகதிக்கு பிறகு ஒரு முட்டை சந்தையில் 50 ரூபாய்க்கும் குறைவாகவே கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

## குடு சலிந்துவின் தாயார் சமர்ப்பித்த மனு

# எதிர்ப்பை தாக்கல் செய்யுமாறு நீதிமன்று சட்ட மாஅதிபருக்கு அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் வர்த்தகர் 'குடு சலிந்து' வின் உயிர் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கோரி அவரது தாயாரினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு 04

# ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியிடம் 50 இலட்சம் ரூபா பண மோசடி

## ATM அட்டையூடாக திருடிய பணிப்பெண் கைது



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியின் ஏ.டி.எம் அட்டையிலிருந்து சுமார் 50 இலட்சம் ரூபாவை மோசடி செய்த பணிப்பெண் உட்பட மூவரை கைது செய்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பணிப்பெண்ணின் மகள் மற்றும் மருமகனும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

11 வருடங்களாக வீட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த பெண்ணிடம் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி, நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையிலிருந்த போது ஏ.டி.எம் கார்ட் மற்றும் அதன் பின் இலக்கத்தை கொடுத்து சிகிச்சைக்கு தேவையான பணத்தை செலவு செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

அதிகாரி, குணமடைந்து வீட்டுக்கு வந்த பின் தனது கணக்கிலிருந்து 50 இலட்சம் பணம் எடுக்கப்பட்டிருப்பது தெரியவந்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.

வங்கிப் புத்தகத்தில் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாகவும், இரண்டு பிள்ளைகளுக்கும் தலா 50 இலட்சம் ரூபாவை கொடுத்து மீதிப் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசாரணையில், சந்தேக நபர் வங்கி அதிகாரியின் ஏடிஎம் கார்டில் இருந்து ஆறு மாதங்களாக பணம் எடுப்பது சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பணிப்பெண்ணிடம் நடத்திய விசாரணையில், ஏடிஎம் கார்ட் அவரது மகள் மற்றும் மருமகனிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த பணத்தில் தங்க நகைகளை வாங்கியதோடு அவர்களுக்கு வீடு ஒன்றையும் வாடகைக்கு எடுத்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் கூறுகின்றனர். 04


National Lotteries Board
2023.03.19
www.nlb.lk

மஹஜன சம்பத
5064
ரூ. 19,636,556.00
X
0 1 9 4 6 2

கொவிசெத
3306
ரூ. 88,200,201.20
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 20 21 32 33

தன நிதானய
1094
ரூ. 81,870,064.40
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 02 48 61 72

மெகா பவர்
1412
ரூ. 308,849,002.00
O 21
06 24 36 72
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத
1519
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,013,488.00
வெற்றி இலக்கங்கள் 6 5 6 0 5 5

ராசி சைய மைல்
சீட்டிழுப்பு இலக்கம் 373
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,683,071.40
35 50 60 61


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 203.45 | 218.35 |
| கனடியன் டொலர் | 223.17 | 239.59 |
| யூரோ | 328.39 | 349.71 |
| ஜப்பான் யென் | 2.2763 | 2.4249 |
| சிங்கப்பூர் டொலர் | 228.62 | 244.11 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 370.07 | 393.49 |
| சுவிஸ் பிராங்க் | 332.65 | 356.98 |
| அமெரிக்க டொலர் | 311.62 | 328.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 845.12 | கட்டார் ரியால் | 87.33 |
| குவைத் டினார் | 1,036.67 | சவூதி ரியால் | 84.87 |
| ஓமான் ரியால் | 827.60 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 86.74 |



புத்தளம் மணல்குன்று ஸ்ரீ பொம்மக்கன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவையொட்டி பக்தர்கள் பால்குடம் பவனியில் கலந்து கொண்டுள்ளதையும், சுவாமி நகர் வலம் வருவதையும் படங்களில் காணலாம். ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பாலகிருஷ்ண குருக்கள் பூஜை வழிபாடுகளை நடாத்தி வைத்தார்.
படங்கள்: புத்தளம் தினகரன் நிருபர் எம்.யூ.எம்.சனூன்

# தண்ணிமலை, உந்துகொடை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலய எண்ணெய்க்காப்பு

புளத்கொஹுபிட்டிய, தண்ணிமலை உந்துகொடை அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் அஸ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2023.04.05ஆம் திகதி காலை 9.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாயத்தில் எதிர்வரும் 2023.04.04 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்காப்பு சார்த்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

150 ஆண்டுகள் பழமைவாயந்த இவ்வாலயத்தின் பாலஸ்தாபனம் 2022ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயம் புனரமக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மங்கள கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாஜனம், தேவ பிராமண அனுக்ஞை, திரவிய பூஜை, பத்திரிகை படனம், குபேர லக்ஷ்மி பூஜை, மஹா கணபதி ஹோமம், நூதன மூர்த்திகளுக்கு ஜலாதிவாசம், தான்யாதிவாசம் நயனோன்மீலனம், கங்கா பூஜை, சூர்யாக்கினி சங்கிரகணம் என்பன நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு லக்ஸ்மி கணபதி பூஜை, புண்ணியாக வாஜனம், கிராம சந்தி, பிரவேசபலி, வாஸ்த்து சாந்தி, கோ பூஜை, கோவாசம், சாந்தி ஹோமம், திஷா ஹோமம், ரக்ஷோக்சன ஹோமம் மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம், நித்ய துவஜாரோகனம், கடகஸ்தாபனம், கலாகர்சணம், தூபிஸ்தாபனம், தீ பால்தாபனம், யத்ரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம் என்பன நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.10 மணி முதல் 10.38 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரம், ஸ்தூபி கும்பாபிஷேகம் தொடர்ந்து விநாயகப் பெருமான், ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தசமங்கள தரிசனம்,எஜமான் அபிஷேகம், ஆசியுரை, குருமார் கௌரவிப்புக்கள் என்பன இடம்பெறும்.

இன்று பகல் 1.00 மணிக்கு மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம், மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

சிவஸ்ரீ ஜோதி பத்மநாதக்குருக்கள் (ஸ்ரீ சனாதன தர்ம பூடம் ஆலோசகர்) தலைமையில் பிரதிஸ்டா பிரதம குரு (மாவனல்ல ஸ்ரீ கதிரேஷன் கோவில் பிரதமகுரு) கிரியாரத்ணம் சிவஸ்ரீ பால பிரதீபக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ லக்ஷ்மண சக்திதரக்குருக்கள் (பதுளை), சிவஸ்ரீ ஜெகநாத திவாகர குருக்கள் (மாத்தளை), சிவஸ்ரீ சபா பாஸ்கர குருக்கள் (கொழும்பு), சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசந்திர குருக்கள் (யாழ்ப்பாணம்), பிரம்மஸ்ரீ நிரோஷன் சர்மா (யாழ்ப்பாணம்) பிரம்மஸ்ரீ கீர்த்திகானன் சர்மா (மாவனெல்ல), பிரம்மஸ்ரீ ஸ்ரீராம் சர்மா (பதுளை), பிரம்மஸ்ரீ ஹரிகர சர்மா (கொழும்பு), சிவஸ்ரீ பத்மரங்கநாத குருக்கள் (கண்டி), (சனாதன தர்ம பீட தலைவர்), பிரம்மஸ்ரீ யோ.விக்னேஸ்வர சர்மா (தெல்லிப்பளை) ஆகிய கும்பாபிஷேக கிரியைகளை செய்வார்கள்.

இதனை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வெள்ளசாமி சர்மா தெரிவித்தார்.

## கடுமையான... 03ஆம் பக்கத் தொடர்

பொன்னத்துரை கிருஷாந்தன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி மீன்பிடிக் படகொன்றுடன் 12 மீனவர்களை வடமாகாண கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்திய மீனவர்களை வடக்கடலுக்குச் செல்ல வேண்டாமென கடுமையாக விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு கடுமையான நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தினூடாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்பை தாக்கல்... 03ஆம் பக்கத் தொடர்

அதனுடன் சம்பந்தப்பட்ட எதிர்ப்புகளை சமர்ப்பிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

அதற்கிணங்க சம்பந்தப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்பை ஏப்ரல் 4ஆம் திகதிக்கு முன்பதாக தாக்கல் செய்ய வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் உள்ளடங்கிய மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு மீதான விசாரணை இடம்பெற்ற சந்தர்ப்பத்திலேயே மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு இந்த கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

குடு சலிந்துவை மடகஸ்காரில் இருந்து குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.த.ஊ சங்கத்... 03ஆம் பக்கத் தொடர்

சஜித் பிரேமதாசவினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் கலந்து கொண்டார்.

## ஓய்வுபெற்ற வங்கி... 03ஆம் பக்கத் தொடர்

அவர்கள் வெளியில் செல்வதற்கும், ஆடைகள் வாங்குவதற்கும் பணத்தை பயன்படுத்தியதாக அவர்கள் கூறியதாக சந்தேக நபர் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும், மொரட்டுவ எகொட உயன மோதர பிரதேசத்தை சேர்ந்தவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது

## பாதிக்கப்பட்டோருக்கு,...

அறிந்தகையோடு, தனது அமைச்சின் செயலாளரை தொடர்பு கொண்ட ஜீவன் தொண்டமான், உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு ஆலோனை வழங்கினார்.

அதன்பின்னர் பிரதேச செயலாளர், பாதுகாப்பு தரப்பினர், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், ட்ரஸ்ட் நிறுவன பிரதானிகள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய அமைச்சர், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அப்பகுதியில் மண்சரிவு ஏற்படக்கூடிய ஏனைய இடங்கள் இருப்பின், அங்கு மக்கள் வாழ்வார்களாயின், அவர்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.

## IMF அனுமதியுடன்...

பொருட்களை இறக்குமதி செய்வதற்கு போதுமான வெளிநாட்டுக் கையிருப்பு அதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி இலங்கைக்கு கிடைப்பதன் மூலம் முதலீட்டாளர்கள் இலங்கை மீது வைத்துள்ள நம்பிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அதனூடாக நாட்டுக்கு புதிய வெளிநாட்டு நிதி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளும் கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விசாரணைக்கு சென்ற...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கணவன், மனைவியை தொடர்ந்தும் தாக்கிவருவதாக மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனை விசாரணை செய்யவென சென்ற பொலிசார் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்தியவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் புலனாய்வு பிரிவு உறுப்பினர் சிவகீர்த்தி எனத் தெரியவந்துள்ளது. இவரிடமிருந்து கிறைணைட் கைக்குண்டொன்றை பொலிசார் மீட்டுள்ளனர். சம்பவத்தின்போது அவர் மது போதையிலிருந்ததாக தெரிய வருகிறது.

படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜண்ட் சுபசிங்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரான புஸ்பகுமார ஆகியோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நெற் செய்கையாளர்களுக்கு...

விவசாயிகளுக்கு இந்த உரம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

நெற் செய்கை மேற்கொள்ளப்படும் நிலத்தின் அளவு மற்றும் அதற்கு தேவையான அளவின் அடிப்படையில் உரம் வழங்கப்படும்.

விவசாயிகள் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இந்த உதவிகள் ஆதரவளிக்குமென்றும், இதனை வழங்கியமைக்காக நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உரத்தை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் , 'விவசாயிகளின் அரிசி உற்பத்தியை அதிகரித்து , நாட்டின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய கடுமையான முயற்சி செய்யும் இந்த சந்தர்ப்பத்தில் 45,000 தொன்னுக்கும் அதிக உரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

75 ஆண்டுகளாக முன்னேற்றத்திலும், நெருக்கடியினூடாகவும் இலங்கை மக்களுக்கு ஆதரவாக அமெரிக்க மக்கள் நின்றுள்ளதோடு, எங்களின் நல்லெண்ணத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளோம் என்றார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர கருத்து வெளியிடுகையில் ,

இந்த உதவியின் மூலம் எதிர்வரும் அறுவடைப் பருவங்களில் விளைச்சல் சீராக மேம்படுமென்று நம்புகின்றோம். அரிசி இறக்குமதியில் தங்கியிருப்பதை குறைத்து, இலங்கை நெல் விவசாயிகளை மேலும் வலுவூட்டுவதே எமது இறுதி நோக்கமாகும் எனத் தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியர்களுக்கு...

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதமூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேற்படி 3000 க்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் தேர்தலில் வேட்புமனு தாக்கல்செய்யப்பட்டதையடுத்து அவர்களுக்கான சம்பளம் இழக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் குடும்பங்கள் பெரும் கஷ்டத்திற்குள் உள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் அந்தக் கடிதமூலம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்துவது உறுதியில்லை என்றால் மேற்படி அரசாங்க உத்தியோகத்தர்கள் பெற்று வந்துள்ள சம்பளத்திலிருந்து நியாயமான ஒரு தொகையையாவது மார்ச் 9 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதேவேளை, அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் கடன்களுக்கான அறவீடுகள் வட்டி உள்ளிட்டவைகளை தேர்தல் இடம்பெறும் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அக்கடிதமூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## 835 ஆரம்ப...

ஜூலி சங் மேற்படி பாடசாலை மாணவர்களுக்காக 770 மெற்றிக் தொன் அரிசியையும் 100 மெற்றிக் தொன் மரக்கறி எண்ணெய்யையும் உணவுத் திட்ட உதவியாக அமெரிக்கா பெற்றுக்கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நிதிஉதவியின் கீழ் செயற்படும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போசனை வேலைத்திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்கத் தூதுவர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.அதன்போதேஅவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க USDA மற்றும் வெளிநாட்டு விவசாய சேவை FAS, மெக் கவர்ண் டோல் கல்விக்கான உணவு வேலைத்திட்டத்தின் மூலம் 770 மெற்றிக் தொன் அரிசியும் 100 மெற்றிக் தொன் மரக்கறி எண்ணெய்யும் கிடைக்கவுள்ளன.

கடந்த ஆண்டு முதல் அமெரிக்காவின் விவசாய திணைக்களம் இலங்கையில் நுவரெலியா, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 835 பாடசாலைகளைச் சேர்ந்த 95,000 மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பருப்பு மற்றும் செமன் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

அத்துடன் ஆரம்ப பாடசாலைகளில் நிலவும் மலசலகூட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அதற்கான உதவிகளை அமெரிக்கா வழங்குமென்றும் தெரிவித்துள்ளார்.

## 62 குடும்பங்களைச் சேர்ந்த...

62 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மண்சரிவினால் காயமடைந்த ஐந்து பேர் கொஸ்லாந்தை அரசாங்க வைத்தியசாலை மற்றும் தியத்தலாவ அரசாங்க வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நாட்டின் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதற்கிணங்க, பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் பிரிவு, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பிரதேச செயலக பிரிவு, நாகொட மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவு, மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை, ரத்தொட்டை,வில்கமுவமற்றும்நாவுல பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்தவகையில் இன்று 21 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மேற்படி மண் சரிவு எச்சரிக்கை அமுலுக்கு வருவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் தொடர்ச்சியாக 150 மில்லிமீற்றர் மழை பெய்யுமானால் மண் சரிவு மற்றும் குன்றுகள் கற்கள் சரிந்து விழுதல், மண் குன்றுகள் இடிந்து விழுதல், நில வெடிப்புக்கள் இடம்பெறலாம் என்றும் அதுதொடர்பில் பாதுகாப்புடன் செயற்படுமாறும் அந்த நிறுவனம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## நுவரெலியாவில்...

'தொதல்' உள்ளிட்ட இனிப்புக்களை கொள்வனவு செய்துள்ளனர்.

இதன்போது வாங்கப்பட்ட 'தொதலை' உண்பதற்காக வெட்டியபோது அந்த 'தொதல்' பொதியில் இறந்த எலி இருப்பதை அவதானித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையம் மீது உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## IMF தீர்மானம்...

நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அமெரிக்க நேரத்தின் படி நேற்று இரவு 10 மணியளவில் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று அந்தத் தீர்மானம் வெளியிடப்படுமென்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலரை கடனாக வழங்கவுள்ளதுடன் அதன் முதற்கட்டமாக 320 மில்லியன் அமெரிக்கன் டொலரை வழங்கவுள்ளதுடன் அந்த நிதி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நாட்டுக்குக் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் நான்கு வருடங்களுக்காக 8 தடவைகளில் அந்த முழுமையான நிதி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமானது தொடர் பேச்சுவார்த்தையின் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளதுடன் அதற்கான அனுமதி இன்றைய தினம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து வெளியிடப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் திகதி...

பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக உள்ளதா என்பதை ஆராய்ந்து அதனை முடிவு செய்த பின்னரே தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ள அவர், தேர்தல் ஆணைக்குழு அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

எந்தவகையிலும் எந்த அரசாங்க அதிகாரியும் தன்னிச்சையாக உள்ளூராட்சி சபை தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என தெரிவித்துள்ள அவர், தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்பதாக அதற்கு தேவையான சூழலை உருவாக்கிக் கொள்வது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நிறைவடைந்துள்ள நிலையில் அவற்றின் அதிகாரம் ஆணையாளர்களுக்கும் உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மார்ச் 30 முதல் முதலாம்...

06 – 09 மற்றும் 10 – 13ஆம் வகுப்பு பாடத்திட்டங்கள் அனைத்தையும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ள அமைச்சர், அடுத்த மாதத்தில் அதற்கான முன்னோடி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழிநுட்பத்துடன் அதனோடு சம்பந்தப்பட்ட செயற்கை நுண்ணறிவுப் பாடத்தையும் கற்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள

அமைச்சர் அதற்குத் தேவையான பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் வளங்களையும் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், 2030ஆம் ஆண்டாகவும் போது கல்வித்துறையில் உலக ரீதியான அபிவிருத்தி இலக்கை நிறைவு செய்யும் சவாலை வெற்றிகொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் 8000 பேர் மற்றும் 26000 பட்டதாரி ஆசிரியர்களையும் அடுத்த மாதத்தில் கல்வித் தொகுதியில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அத்துடன் மனித வளங்களை அதிகரிக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பொருளாதாரத்தில்... (06ஆம் பக்கத் தொடர்)

அந்த உதவியும் கிடைத்தவுடன் எமது கடனை வழங்கும் தரப்படுத்தல் வீழ்ச்சி அடைந்துள்ள நிலைமை உயர்வடையும். அதன் காரணமாக எம்மால் உலக வர்த்தக சந்தைக்கு செல்லக்கூடியதாக இருக்கும். நாம் வங்குரோத்து நிலைமையிலிருந்தும் மீளலாம்."

ரஜரட பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் நிதி முகாமைத்துவ திணைக்களப்பிரிவின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.எம். என்.சீ.ஸ் வர்ணமாலி பின்வருமாறு கூறுகிறார்:

"நாம் அறிந்த அளவில் பொருளாதாரத்தில் வளர்ச்சியே காணப்படுகின்றது. தரவுகள் தெளிவாக இல்லாமல் எமக்கு பொருளாதாரத்தின் நடத்தை தொடர்பாக தெரிவிப்பது சிரமமாகும். ஆனாலும் அரசு சுட்டிக்காட்டுவது போன்று பொருளாதாரத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது தெரிகின்றது.

விசேடமாக வெளிநாட்டு பணியாளர்கள் பணம் அனுப்புவதனாலும் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு காரணமாகவும், நாட்டின் இறக்குமதிக்கு விதித்துள்ள கட்டுப்பாடு காரணமாகவும் எமது டொலர் கையிருப்பில் அதிகரிப்பை காணக் கூடியதாக உள்ளது.

அத்துடன் இந்த பொருளாதார வளர்ச்சியை நேர்மறையாக பார்க்க நான் முயற்சி செய்கின்றேன். விசேடமாக நாட்டின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்ய அரசு முயற்சி செய்து வருகிறது தெரிகின்றது. அதனால் நம்பிக்கையுடன் அதனை நோக்குவதற்கே நான் விரும்புகின்றேன்.

உதாரணமாக நாம் அனைவரும் யுத்தம் நடைபெற்ற காலத்தில் பாதுகாப்பு வரி அறவிடப்பட்டதை அறிவோம். யாரும் அது குறித்து எதுவும் கூறவில்லை. ஏனென்றால் யுத்தம் காரணமாக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என அறிந்திருந்தார்கள். அதேபோன்று இந்த பொருளாதாரப் பிரச்சினை காரணமாக குறிப்பிட்ட காலத்தை குறிப்பிட்டு அதுவரை அர்ப்பணிப்பை செய்ய வேண்டும் என கூறினால் நாம் அதனூடாக ஊழியர்களின் அர்ப்பணிப்பை எதிர்பார்க்க முடியும்". ருஹுனு பல்கலைக்கழக முகாமைத்து மற்றும் நிதி பீடத்தின் பேராசிரியர் சமந்தகுமார பின்வருமாறு கூறுகின்றார்:

"ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதற்கும் நிலையாக வைத்திருப்பதற்கு ஏற்றுமதி மற்றும் உற்பத்தி பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும். ரூபாவின் பெறுமதி டொலருக்கு இணைந்ததாக அதிகரிப்பது தேசிய ரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் எமது பொருளாதாரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் நாம் செய்ய வேண்டியது அந்த பெறுமதியை நிலையாக வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகும்.

# கொழும்பில் இலவச கல்வி கருத்தரங்கு

க.பொ.த சாதாரணதர பரீட்சையில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான நுட்ப முறைகளுடன் கூடிய விசேட இலவச கல்விக் கருத்தரங்கு (26) ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.விவேகானந்தா மேட்டுத் தெருவில் கொழும்பு 13இல், அமைந்துள்ள விவேகானந்த சபை மண்டபத்தில்,

காலை 08:00 மணி முதல் மாலை 05:30 வரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், தமிழ் மொழி,வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் தகுதி வாய்ந்த வளவாளர்களினால் நடத்தப்படும்.

கடந்த கால வினா விடை புத்தகங்களும் பாடக் குறிப்புகளும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் ஏற்பாட்டாளர் சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியுடன் 0771133400 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# உலக நீர் தின விழா; அமைச்சர் ஜீவன் தலைமையில் நாளை இரத்மலானையில்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(பேருவளை விசேட நிருபர்)



உலக நீர் தின விழா நாளை 22ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்தில் (Centre of Excellence for Water and Sanitation CEWaS) கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்கவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில், யூ.என்.டி.பி. இலங்கை வதிவிட பிரதிநிதி அஷுசா குபோட்டா சிறப்புரையாற்றவுள்ளார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஓவியம், கட்டுரை, மேடை நாடகம் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன.

அத்துடன், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய ஊழியர்களுக்கு தங்க நாணயமும், கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3–ஏ சித்திபெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டபிள்யூ.எஸ். சமரதிவாகர உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் வசந்தா இலங்ஹசிங்க உட்பட உயரதிகாரிகள் இந்நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர்.

# வைத்தியசாலைக்கு சுற்று மதில்



பம்பரதெனிய வைத்தியசாலையின் அவசரத் தேவையாக இருந்த சுற்றுமதில், வட்டதெனிய, கஸ்வா நலன் புரி சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வைபவ ரீதியாக இடம்பெற்ற இந்தச் சுற்று மதில் திறப்பு விழாவில், வைத்தியசாலை நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், வெலம்பொட பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரி நீல் பண்டார, வைத்தியர் டாக்டர், ஜயலத், அல்ஹாஜ் எம் ஆர் எம், கியாஸ், அல்ஹாஜ் முஸம்மில் உடயார், கஸ்வா நலன் புரி சங்கத்தின் தலைவர் எம். கே, ரியாஸ் மொஹமத், மற்றும் உறுப்பினர்கள், வட்டதெனிய முஹ்யித்தீன் ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அஷ்ஷேக் மௌலவி அனஸ் ஹக்கானி ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இவ்வேலைத் திட்டமானது பிரதம அதிதிகளால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவ்வேலைத் திட்டத்திற்காக உதவிய சகலருக்கும் கஸ்வா நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

# இணைய வழியில் கருத்தாடல்



உலகக் கவிதைத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தாடலும் நூல் வெளியீடும் (21) இன்று மாலை ஐந்து மணி'க்கு இணைய வழியில் நேரலையாக இடம்பெறுகிறது.

இக்கருத்தாடலில், ஹேமசந்திர பதிரன, இப்னுஅஸூமத், முல்லை முஸ்ரிபா ஆகியோர் உரையாற்றுகின்றனர்.மேலும், உலகக் கவிதைத் தினத்தை (21) முன்னிட்டு "யாரோ எமக்கு எதிராக நிற்கிறார்கள்" என்ற நூலும் வெளியிடப் படவுள்ளது. இந்நூலின் முதற்பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

# ஜெயிக்கா பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கு சான்றிதழ்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)




ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) அனுசரணையில் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி பயிற்சி நெறியை (KCCPAsia) பூர்த்தி செய்த இலங்கை அரச துறை அதிகாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஜெயிகா அமைப்பின் கொழும்பு பணியகத்தில் அண்மையில் நடைபெற்றது. இலங்கை, மலேசியா, கம்போடியா, ஜப்பான், இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட ஆறு நாடுகளிலிருந்து தெரிவான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஜப்பான் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தில் இந்த பயிற்சி நெறியை மேற்கொண்டனர்.

இந்த பயிற்சி நெறியில் இலங்கையிலிருந்து நான்கு துறை சார்ந்த அதிகாரிகள் பங்குபற்றினர்.

சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் உலக வங்கி அனுசரணையிலான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி திட்டத்தின் செயற்திட்ட அதிகாரி ஏ.ஜே.எம். அஸாஹிம் ஜிப்ரி இந்த பயிற்சி நெறியில் கலந்துகொண்டார். பயிற்சியில் கலந்துகொண்ட தமிழ் மொழி அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜெயிக்கா ஸ்ரீலங்கா நிறுவனத்தின் இரண்டாவது செயலாளரிடமிருந்து அஸாஹிம் ஜிப்ரி சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.




கொழும்பு கல்வி முன்னேற்றச் சங்கம் ஜீ.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் "ஏ" சித்திபெற்று சாதனை படைத்த சப்ரகமுவ மாகாண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை அண்மையில் நாப்பாவெல முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடாத்தியது. இதன்போது அதிதியாக கலந்து கொண்ட முஸ்லிம், சமய, கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸால் ஆப்தீனை சங்க நிர்வாகிகள் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

(படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

# க.பொ.த உ/த விஞ்ஞான பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்வி பொதுத்தராதர சாதாரண தரம் பரீட்சையில் 9 ஏ மற்றும் அதி திறமைச் சித்திகளைப் பெற்று கல்வி பொதுத்தராதர உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க முஸ்லிம் கல்வி முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ள மாணவர்கள் பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் அதிபர் அத்தாட்சிப்படுத்திய பிரதி, சுய விபரக்கோவை, புலமைப் பரிசிலை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை கடிதம் என்பவற்றை உள்ளடக்கி, தலைவர், இல 61, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 என்ற முகவரிக்கு கடிதத்தின் முன் பக்க இடது மூலையில் 'க.பொ.த உயர் தர விஞ்ஞான பிரிவில் கற்பதற்கான புலமைப் பரிசில்' எனக்குறிப்பிட்டு இம்மாதம் 29 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் தலைவர் எம். இஸட். அஹமட் முனவ்வர் தெரிவித்துள்ளார்.




நாமக்கல் எஸ்.எஸ்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆண்டு மற்றும் விளையாட்டு தின விழாக்கள், அண்மையில் நடைபெற்றன. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் சிறப்புரையாற்றியதுடன், பரிசுகளையும் வழங்கினார்.

# இந்தியாவின் முக்கியஸ்தர்களுடன் இ.தொ.கா தலைவர் சந்திப்பு



ஜோர்தானுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் மாரிமுத்து, இந்தியாவின் இராஜதந்திரி ஸ்ரீ.கோபாலசாமி பார்த்தசாரதிமற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

கோபாலசாமி பார்த்தசாரதியின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துவது குறித்து கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இலங்கைக்கு இந்தியா முழு ஆதரவை வழங்க வேண்டும் என இக்கலந்துரையாடலில் இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.



லயனல் வென்ட் கலைக்கூடத்தில் வெள்ளிக்கிழமை (17) பாலஸ்தீன மீட்பு தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த புகைப்படங்களை பார்வையிடுகிறார்.



சமுர்த்தி வீடமைப்பு அதிஸ்டலாப சீட்டெழுப்பில் வெற்றிபெற்ற குடும்பப் பெண்ணொருவருக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அச்ஷெய்க் ரீ.எம்.எம் .அன்சார் காசோலை வழங்கினார். மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.சப்றாஸ் மற்றும் அதிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

(படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நினைவுப் பகிர்வும் புத்த(க)ன் நூல் வெளியீடும்



சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நினைவுப் பகிர்வும் புத்த(க)ன் நூல் வெளியீடும் இன்று (21.03.2023) பி.ப. 3.30 செவ்வாய்கிழமை மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான க. சுரேஸ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், சிவசக்தி ஆனந்தன் மற்றும் சுகு ஸ்ரீதரன் (பொதுச்செயலாளர், தமிழர் சமூக ஜனநாயக் கட்சி), கவிஞர் த. ஜெயசீலன் (ஆணையாளர், யாழ் நகரசபை), முருகேசு ரவீந்திரன் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), மோகன், திரு. வளவன். தேசிகன், திருமதி ஞானா, தமயந்தி, ந. பரமேஸ்வரன், சி. ரமேஸ், கருணாகரன், கணேசலிங்கம் (ஊடகவியலாளர்), திருமதி வாசுகி சிவகுமார் (ஊடகவியலாளர்) ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளனர்.


Capitaltrust
Capital TRUST Research(Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## More foreign funds into treasury bonds and stocks expected with IMF board approval...

Daily Market Watch
20th March 2023

### Market Commentary

The market opened the week on a positive note with investors keenly awaiting the IMF Board approval today. Turnover recorded LKR 1,798 mn, with Browns Investments (BIL) gaining 9.4% on a turnover of LKR 209 mn, while Hemas Holdings recorded a turnover of LKR 236 mn. After the economy shrank by 7.8% in 2022, many listed companies and investors are suffering from lack of funds. However, we expect more foreign funds into treasury bonds and stocks with IMF board approval, and interest rates to decline and stock prices to move upwards.

### Market Performance

| | 20.03.2023 | 17.03.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,700.0 | 9,670.4 | 0.31 |
| S&P SL 20 Index | 2,851.7 | 2,840.1 | 0.41 |
| Turnover (LKR mn) | 1,797.8 | 1,249.4 | 43.9 |
| Foreign Purchases (LKR mn) | 227.1 | 387.2 | -41.3 |
| Foreign Sales (LKR mn) | 64.8 | 177.9 | -63.6 |
| Market Cap (LKR bn) | 4,042.6 | 3,998.4 | 1.1 |
| Market Cap (US$ bn) | 12.1 | 11.9 | 1.1 |
| Traded Companies | 250 | 232 | 7.8 |
| Market PER (x) | 5.2 | 5.1 | 1.2 |
| Price to Book (x) | 1.0 | 1.0 | 1.1 |
| Dividend Yield (%) | 3.9 | 4.0 | -1.3 |

### Top % Gainers and Losers




### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI




### Turnover Breakdown




### Key Rates

| | 20.03.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.74% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.23% |
| Treasury Bill Rate (364 Days) | 25.92% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.60% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Kelani Valley Plantations PLC (KVAL) - LKR 3.00. XD date - 24.03.2023.
Hayleys Fabric PLC (MGT) - LKR 0.30. XD date - 24.03.2023.
Talawakelle Tea Estates PLC (TPL) - LKR 6.00. XD date - 24.03.2023.
Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date - 24.03.2023.
Hayleys Fibre PLC (HEXP) - LKR 0.50. XD date - 24.03.2023.
Dipped Products PLC (DIPD) - LKR 0.60 . XD date - 24.03.2023.
Hayleys PLC (HAYL) - LKR 5.35. XD date - 24.03.2023.
Ex-pack Corrugated Cartons PLC (PACK) - LKR 0.72. XD date - 22.03.2023.
Ceylon Tobacco Company PLC (CTC) - LKR 30.00 XD date - 31.03.2023.
Sampath Bank PLC (SAMP) - LKR 3.45. XD date - 31.03.2023.

SCRIP DIVIDENDS

Sampath Bank PLC (SAMP) - 1 share for 40.3989773996 Shares. XD date - 31.03.2023.
Commercial Bank of Ceylon PLC (COMB) - 1 share for 16.9934641119 Shares. XD date - 31.03.2023.
Hatton National Bank PLC (HNB) - 1 share for 23.5294128792 Shares. XD date - 31.03.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*


# அநுராதபுரம் ரன்மசு உயனவை அபிவிருத்தி செய்து சுற்றுலாத்துறையை கவரத் திட்டம்

## பண்டைய படைப்புக்களை காப்பாற்றுவதில் கவனம்

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுரத்தின் மற்றொரு அரிய பாரம்பரிய இடமாக அநுராதபுர ரண்மசு உயன கருதப்படுகின்றது. வரலாற்று முக்கியமிகு இவ்விடம் அநுராதபுரம் இசுருமுனிய விகாரைக்கு வடக்கே சுமார் 200 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அதிகளவான தொல்பொருட்கள் உள்ள இந்த ரன்மசு உயன எனும் இடத்தை சுற்றுலாத்தளமாக மாற்றுவதற்கும், பயணிகளைக் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இரண்டாம் திஸ்ஸ மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படும் இப்பகுதியில், சுரங்க தங்க மீன் பூங்காவும் உள்ளது. இதனாலேயே, "ரண்மசு உயன" என இது அழைக்கப்படுகிறது. இதன் மொத்த பரப்பளவு கிட்டத்தட்ட 40 ஏக்கராகவுள்ளது. இங்குள்ள குளங்களில் தங்க மீன்கள் இருந்ததால் "ரன்மசு உயன" என்ற பெயர் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அழகிய கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள இக்குளங்கள், பண்டைய கல்வெட்டு படைப்பாளிகளின் அற்புதமான படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. இப்பகுதியை மேலும் அழகுபடுத்தி சுற்றுலாத்துறையை கவர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் பங்குனி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 28

**குறள் தரும் சிந்தனை**



கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி

பைழமையான நண்பர்கள் தவறு செய்த போதிலும், அவர்களிடம் தமக்குள்ள அன்பை நீக்கிக் கொள்ளாதவர்களைப் பகைவரும் விரும்பிப் பாராட்டுவார்கள்.

# நாடு மீண்டெழுந்து வருவதை வெளிப்படுத்தும் அறிவிப்பு

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய அறிவிப்பை விடுத்துள்ளார். 'வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டோம்' என்பதுதான் அந்த அறிவிப்பு.

இந்நாடு கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையோடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க ஆரம்பித்தது. அதன் விளைவாக எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களின் விலைகள் பெரிதும் அதிகரித்தன. எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலை தோற்றம் பெற்றது. இந்நிலையில் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட வாகன போக்குவரத்து பெரும்பாலும் ஸ்தம்பித நிலையை அடைந்தது. அதன் காரணத்தினால் இந்நிலைமைக்குத் தீர்வும் நெருக்கடிகளுக்கு நிவாரணமும் கோரி ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தும் நிலைக்கு மக்கள் உள்ளாகினர்.

அதேநேரம் இப்பொருளாதார நெருக்கடியோடு சேர்த்து அரசியல் நெருக்கடியும் தோற்றம் பெற்றது. அதனால் பிரதமர் உட்பட அமைச்சரவையினர் தம் பதவியை இராஜிநாமா செய்தனர். இருந்த போதிலும் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் குறையவும் இல்லை. அவர்களது பதவி விலகல் தீர்வாக அமையவும் இல்லை. மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் இப்பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்து தீவிர நிலையை அடைந்தது.

அதன் விளைவாக அன்றைய ஜனாதிபதி, நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் தம் பதவியை இராஜிநாமா செய்தார். இந்தச் சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வரவில்லை. இந்த இக்கட்டான சூழலில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் பொறுப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போது எரிபொருள், எரிவாயு, பசளை உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கு பாரிய நெருக்கடி நாட்டில் நிலவிக் கொண்டிருந்தது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது. அந்நெருக்கடிகள் அனைத்தையும் சவால்களாகக் கருதி பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அவர் ஆரம்பிக்கலானார். கடந்த காலத்தில் இந்நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடிகளை ஏற்கனவே வெற்றிகரமாக கையாண்டு முகாமைத்துவம் செய்த அனுபவத்தைப் பின்புலமாகக் கொண்டு அவர் இந்நடவடிக்கைகளை முன்னெடுக்கலானார். இதன் நிமித்தம் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன் பிரதிபலனாக கடந்த வருடம் மே முதல், ஜூலை வரையான காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் தீவிர நிலை தற்போது முற்றிலும் நீங்கியுள்ளது. அன்று சமூகக் கட்டமைப்பில் காணப்பட்ட நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஏழு மாத காலப்பகுதிக்குள் அனைத்து கட்டமைப்புகளும் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடுகள் இன்றி இன்று கிடைக்கப்பெறக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் நிலவிய பொருளதாரப் பாதிப்புகள் ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளன.

இந்தச் சூழலில் அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றியுள்ள ஜனாதிபதி, 'பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மூச்சுவிடும் சூழலை சர்வதேச நாணய நிதியம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பொருளாதாரம் கடந்த வருடத்தை விடவும் தற்போது ஒப்பீட்டளவில் ஸ்திரமடைந்துள்ளது. அதனால் நாடு தற்போது வங்குரோத்து நிலையில் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நாட்டு மக்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மேலும் வலுப்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

இந்நாடு கடந்த வருடம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி மீண்டும் ஒருபோதும் நாட்டில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். அந்தளவுக்கு அசௌகரியங்களையும் தாக்கங்களையும் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் இந்நாட்டு மக்கள் அனுபவித்துள்ளனர்.

நாடு இக்கட்டான நிலைக்கு உள்ளாகி இருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப்பதவியை ஏற்றிருந்தார். நாடு மீட்சிபெற்று வருகின்ற இவ்வேளையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே நாட்டினதும் மக்களினதும் நலன்களில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியா வழங்கியது போன்ற நம்பகமான உறுதிமொழி சீனாவிடமிருந்து இன்னுமில்லை!

## இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைப்பதற்கான கடன்மறுசீரமைப்புக்கு புதுடில்லி முழுமையான உறுதியான ஆதரவு



பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்குமென்பது உறுதியாகியுள்ளது. அதற்கான அறிவிப்பு ஏற்கனவே வெளியாகியிருந்தது. ஆனாலும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அரசுக்கு எதிரான அரசியல் சக்திகள் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அரசியல் கட்சி உள்ளது தெளிவாகியுள்ளது. மக்களின் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியிலும் எதிரணி அரசியல் சக்திகளே உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைச் சீர்குலைப்பதன் ஊடாக அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதே எதிரணிகளின் நோக்கமாக உள்ளது. ஆனாலும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் உறுதியாகவே உள்ளது. அதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

அதேசமயம் சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவியளிக்க வேண்டுமென்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு இந்தியா ஆதரவளிக்குமென்று புதுடில்லி ஏற்கனவே அறிவித்தும் விட்டது. அதுமாத்திரன்றி சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு ஏதுவாக இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான மறுசீரமைப்புக்கு இந்தியா உதவுமென்றும் இந்தியா உறுதியாக அறிவித்து விட்டது.

ஆனால் இந்த விடயத்தில் சீனாவின் அறிவிப்பானது உறுதியானதாக இல்லையென்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். கடன் மறுசீரமைப்புக்கு உதவுவதாக சீனா குறிப்பிட்டுள்ள போதிலும் அந்த அறிவிப்பானது உறுதியானதாக இல்லையென்று அவர்கள் கூறுகின்றனர்.

அதுமாத்திரமன்றி, கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இந்தியாவின் அறிவித்தல் வெளியாகி நீண்ட நாட்களின் பின்னரே சீனாவிடமிருந்து இது தொடர்பான அறிவித்தல் வெளியாகியிருந்தது. எனவேதான் சீனாவின் அறிவித்தல் மீது சர்வதேச பொருளாதார நிபுணர்களுக்கு இவ்வாறான சந்தேகம் தோன்றியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு ஆதரவளிப்பதன் மூலம் இலங்கையின் கடன் சுமையை குறைக்க உதவுவதாக இந்தியா ஆரம்பத்திலேயே உறுதியளித்திருந்தது.

“இலங்கையுடன் நாங்கள் ஆதரவாக இருக்க விரும்புகிறோம், நாங்கள் இருதரப்பு உதவியாக இருந்து வருகிறோம். இலங்கைக்கான ஒரு நிலையான கடன் கட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டிய ஒரு முக்கிய அங்கம் இப்போது உள்ளது. சர்வதேச நாணய நிதியம் அதை வழிநடத்துகிறது மற்றும் அதன் ஒரு பகுதியாக அவர்கள் மற்ற கடனாளர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தை விரும்பினர். நாங்கள் அதைச் செய்துள்ளோம். நாங்கள் அதை முறையாக சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பியுள்ளோம்" என்று இந்திய அரசின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் சீனாவோ இவ்வாறான உறுதியான நடவடிக்கைகளில் இன்னுமே ஈடுபடவில்லை. எனவே சீனாவின் அறிவிப்பை இலங்கை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு, இந்திய அரசாங்கம் வழங்கி வரும் ஆதரவை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சமீபத்தில் உறுதிப்படுத்தியிருந்தார்.

"நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அண்டை நாடுகளுக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை என்றால், இந்தியா தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக அமைந்துவிடும்" என்று அவர் ராஜ்சபாவில் குறிப்பிட்டிருந்தார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கைக்கு இந்தியா வழங்கிய பொருளாதார ஆதரவு ஒருபோதுமே மறக்க முடியாததாகும். இலங்கைத் தேசத்திற்கான ஆதரவைப் பொறுத்தவரை தமிழ் சமூகத்தையும் உள்ளடக்கிய முழு இலங்கைக்கும் இந்தியா ஆதரவளிக்கிறது என்பதுதான் உண்மை. எனவே இலங்கைக்கு ஆதரவு வழங்குவதில் எந்தவொரு இனவாத அணுகுமுறையையும் இந்தியா கடைப்பிடிக்கவில்லை என்பது இங்கு தெளிவாகின்றது.





தற்போதைய நிலைமைகளை வைத்துப் பார்க்கின்ற போது, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் 2.9 பில்லியன் டொலர் நிதி நிவாரணத்தை பெற்றுக் கொள்வது உறுதியென்பது தெரிகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கி ஆதரவானது, அண்டை நாடுகளுக்கிடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியா நெருக்கடியான நேரத்தில் விரைந்து வந்து இலங்கைக்கு உதவியளித்ததன் மூலம் இலங்கையின் பொருளாதார உயிர்வாழ்தலை உறுதி செய்துள்ளதென்று குறிப்பிட முடியும்.

இலங்கை கடந்த காலத்தில் மிகமோசமான நெருக்கடியில் சிக்கித் தவித்த போதெல்லாம், இந்தியா தாமதமின்றி உதவிகளை வழங்கியது. இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கிடைப்பதிலும் இந்தியா முழுமையான ஆதரவளிக்கின்றது.

இந்தியாவானது அதன் 'அண்டைநாடு முதல்' என்ற கொள்கையின்படி செயல்பட்டு வருகிறது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சவாலை வெற்றிகொள்ளுமென்று இந்தியா நம்புவதுடன், இந்த இக்கட்டான காலகட்டத்தில் இலங்கையின் நம்பிக்கை மிகுந்த நண்பராக இந்தியா இருக்குமென்பதும் புதுடில்லியின் கொள்கையாகும்.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீ ட்பதற்காக கடன் வழங்குனர்கள் செயற்திறனுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றே இந்தியா உறுதியாக நம்புகிறது. எனவேதான் ஏனைய தரப்புக்களைப் பற்றி பாராமல் தான் சரியென நினைத்ததை செயற்படுத்த இந்தியா தீர்மானித்தது. அதற்கமையவே, இலங்கையை மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நிதி உத்தரவாதத்தை இந்தியா வழங்கியது. ஆனால் சீனாவோ இன்னுமே உறுதிப்பாடான நிலைப்பாட்டைக் காண்பிக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் இலங்கை தற்போது ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. கடன் வழங்குனர் என்ற வகையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்காக சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா ஏற்கனவே உத்தரவாதம் அளித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் இந்த பொருளாதார வெற்றியையும் அதற்குள்ள சர்வதேச நற்பெயரையும் இலங்கை மிகுந்த அபிமானத்துடன் பார்க்கிறது என்றே கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறுவதற்கு இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவை அமெரிக்காவும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**எஸ். சாரங்கன்...**

# நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டு வருவது தென்படுகின்றது

## ரூபா வலுவாக உள்ளதா, இல்லையா?

ரூபா வலுவடைந்துள்ளது எனக் கூறுவது கட்டுக்கதை எனவும் அந்த கட்டுக்கதை அரசியல் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்டது எனவும் ஜாதிக ஜனபல வேகயவின் பொருளாதார கவுன்சில் அங்கத்தவர் சுனில் ஹந்துன்நெத்தி அண்மையில் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்த ரூபாவின் கதை, பொருளாதாரத்தை வலுவடையச் செய்யும் பாதையில் செல்வதை விட எதிர்காலத்தில் தேர்தலை நடத்துவதா? அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க, எதிர்காலத்தில் வரக்கூடிய எதிர்ப்புகளை முகாமைத்துவம் செய்வதற்காக விசேடமாக மக்களை தவறான வழியில் இட்டுச் செல்ல செயற்கையாக உருவாக்கப்பட்ட நிலைமையாகும்.

இலங்கையின் பொருளாதார கொள்கைக்கமைய நிதிச்சந்தையில் அரசாங்க கொள்கையாக காணப்படுவது மிதக்கும் பொருளாதாரம் அல்லது நிர்வகிக்கும் பொருளாதாரமல்ல, மிதக்கும் நிர்வாக பொருளாதாரமாகும்.

பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி வைத்திருப்பது அரசாங்கத்துக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் மிதக்க விடுவதோடு தங்களுக்குத் தேவையான வேளையில் அதனை இறுக்கமாக்குவதற்காகவும் ஆகும். தற்போது அந்நிய செலாவணி மிதப்பதும் இல்லை கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவரப்படவில்லை. அதனைத் தீர்மானிப்பது மத்திய வங்கியாகும். தற்போது மத்திய வங்கி மொத்த பொருளாதாரத்தை பற்றி சிந்திக்காமல் அரசியல் தேவைக்காக அவ்வாறு செய்கின்றது. மத்திய வங்கிக்கு எவ்வித சுயாதீனமும் தற்போது இல்லை. அவர்கள் அவ்வாறு செய்வது அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவாகும்" என சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.



சிரேஷ்ட பேராசிரியர் திலக் சுபசிங்க



பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா



கலாநிதி ஆர்.எம்.என்.சீ. ஸ்வர்ணமாலி



பேராசிரியர் சமந்தகுமார

ரூபா வலுவடைந்துள்ளதா? இல்லையா?

ரூபா வலுவடைந்துள்ளதா? இல்லையா? என்பது பற்றி பலவிதமாக சமூக விமர்சகர்கள், அரசியல்வாதிகள் போன்று முகநூலை பயன்படுத்துபவர்களும் விமர்சித்து வருகின்றார்கள்.

இது தொடர்பாக பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவபீட வர்த்தக நிதி திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் திலக் சுபசங்க தெரிவித்ததாவது:

தற்போது இந்நாட்டில் ரூபாவின் பெறுமதி அதிகரித்து டொலர் வீழ்ச்சி அடைந்தது யாரோ ஒருவரால் செய்யப்படும் மாயாஜாலம் அல்லது போலியாக மேற்கொள்ளப்படுவதல்ல. அவ்வாறு டொலர் அதிகரிப்பு மற்றும் வீழ்ச்சியை ஒருவரால் வேண்டுமென்றே செய்ய முடியாது.

"சாதாரணமாக உலகில் அந்நிய செலாவணி பரிமாற்ற ஊடகமாகவோ அவ்வாறு இல்லாவிட்டால் பரிமாற்ற பண்டமாகவோதான் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பெறுமதி தீர்மானிக்கப்படுவது கேள்வி மற்றும் வளங்களுக்கு அமையவேயாகும். டொலருக்கான கேள்வி அதிகரித்தால் அதன் பெறுமதி அதிகரிப்பது போன்று கேள்வி குறையும் போது விலை வீழ்ச்சியடையும.

தற்போது இந்நாட்டில் டொலர் கிடைப்பது அல்லது டொலர் சேமிப்பு அதிகரித்துள்ளது அரசால் அரச ஊழியர்களுக்கு தொடர்சேவை காலத்தின் கீழ் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு பெற்று கொடுத்த சுற்றுநிருபம் காரணமாக குறிப்பிட்டளவினர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள். அவர்கள் வெளிநாட்டுக்கு கடன் பெற்றே சென்றுள்ளார்கள். அதனால் விரைவில் அவர்கள் தங்களுக்கு கிடைக்கும் சம்பளத்தை இங்கு அனுப்புகிறார்கள். அவ்விதம் குறிப்பிட்டளவு வெளிநாட்டு பணியாளர்களிடமிருந்து நாட்டுக்கு கிடைக்கும் டொலரின் அளவு அதிகரித்தது.

அத்தோடு ஏற்றுமதி மூலம் கிடைக்கும் டொலர் வருமானத்திலிருந்து 25% டொலரை வங்கிகளுக்கு பெற்றுக்கொடுத்து ரூபாவை பெற்றுக் கொள்ளும் வீதம் 15%ஆல் குறைக்கப்பட்டதாலும் மேலும் 10% வீத டொலரளவும் சேமிக்கப்பட்டது.

அதேபோன்று ஏற்றுமதிப் பண்டங்களுக்கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்குப் பதிலாக நிதியை சேமிக்கவும் அநேகமான வர்த்தகர்கள் போன்று சேமிப்பாளர்களும் நடவடிக்கை எடுத்தார்கள். அதற்குக் காரணமக அமைந்தது திறைசேரி உண்டியல்களுக்கு வட்டி வீதம் 36 % என அதிகரித்தமையுமாகும். இந்த விடயங்கள் காரணமாக வர்த்தக சந்தையின் நடத்தைக்கு அமையவே ரூபாவின் பெறுமதி அதிகரித்தது என தெளிவாகக் கூற முடியும். இதில்தான் முதன்மை சந்தை நடவடிக்கைகளும் தங்கியுள்ளன.

அதனால் தெளிவாக டொலரின் பெறுமதி மேலே கீழே செல்வது யாரும் செய்யும் மாயாஜால வேலையும் இல்லை. போலியான ஒன்றுமல்ல எனலாம்"என்று சிரேஷ்ட பேராசிரியர் திலக் சுபசங்க கூறுகின்றார்.

வடமேல் மாகாண பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா கூறுவதாவது:

"பொருளாதாரத்தை சரியாகப் அவதானித்து புரிந்துணர்வுடன் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு பார்த்தால் ஒவ்வொரு விதமாக இந்த நிலைமை தோன்றும், கேள்வி மற்றும் வழங்கல் என்னும் இலகுவான கோட்பாடுதான் இந்த அந்நிய செலாவணி பாதிப்புக்கு காரணம். டொலருக்கு இணைந்ததாக ரூபா உயர்வதற்கு டொலர் வழங்கல் அதிகரித்தோ அல்லது டொலர் வீழ்ச்சி அடைந்தோ இருக்க வேண்டும். எமது நாட்டின் இறக்குமதி ஓரளவுக்கு குறைந்து காணப்படுவதால் டொலரின் கேள்வி ஓரளவு குறைந்துள்ளது. அதேபோன்று சுற்றுலாத்துறை போன்று வெளிநாட்டு பணியாளர்களிடம் இருந்து கிடைக்கும் பணமும் அதிகரித்ததால் டொலரின் பெறுமதி வீதம் ஓரளவு குறைவடைந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் ரூபாவின் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாக நான் கருதுவது மக்களின் எதிர்பார்ப்புகளின் ஊடாக ஏற்பட்ட பொருளாதார அமைப்பாகும்.



சுனில் ஹந்துன்நெத்தி

அடுத்த மாத ஆரம்பத்தில் உலக வங்கியிடமிருந்து 725 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி பங்களிப்பு எமக்குக் கிடைக்கும். மேலும் உலக வங்கியிடமிருந்து அதேபோன்று 1.5 பில்லியன் அமெரிக்க டொலரும் கிடைக்கவுள்ளது. அத்துடன் ஜப்பானின் ஜயிகா நிறுவனத்திடமிருந்தும் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கவுள்ளது. இந்தியாவுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் எமக்கு ஒரு பில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது. அவ்வாறான நிலைமையில் எமது பொருளாதாரத்தில் இந்த வளர்ச்சியின் அடையாளம் தோன்றியுள்ளது.

அத்துடன் தற்போது எமக்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் சாதகமான பதில் கிடைத்து வருகின்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)

**தாரக விக்ரமசேகர**
தமிழில்: **ஆர்.வயலட்...**

# இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோகத்தில் 13ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோகத்தில் 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 36 அடி நீர் கொள்ளளவை கொண்ட பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தில் தற்போது 30 அடி தண்ணீர் மாத்திரமே உள்ளது. இந்நிலையில் திருவையாறு நீர்ப்பாசனத்திட்டம் மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம், நன்னீர் மீன்பிடி மற்றும் வெப்பத்தினால் ஆவியாகுதல் என்பவை தவிர மீதமாகவுள்ள 59 ஆயிரம் ஏக்கர் கன அடி



தண்ணீரை மாத்திரமே சிறுபோக விவசாயத்துக்கு பயன்படுத்தமுடியும் என்பதால் குறித்த நீர் கொள்ளளவை வைத்து இவ்வாண்டு 13ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 1500 ஏக்கர் மேட்டுநிலச் செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதொடர்பிலான பயிர்ச் செய்கை கூட்டம் நேற்று கிளிநொச்சி திட்ட முகாமைத்துவ குழு அலுவலகத்தில் மாவட்ட பயிர்செய்கை குழுவின் தலைவரும் மாவட்ட அரச அதிபருமான ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இவ்வாண்டு சிறுபோக செய்கையை முன்னெடுப்பதற்கு ஏற்றவிதமான சகல நடவடிக்கைகளையும் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்கி சிறுபோக செய்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் உரிய காலத்தில் பயிர் செய்கைகளை மேற்கொள்வதுடன் கால்நடைக் கட்டுப்பபாடு நீர் முகாமைத்துவம், பயிர் காப்புறுதி, உரம் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளின் விநியோகம் என்பன தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.



முனைத்தீவை பிறப்பிடமாகவும் முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியுமான விஜயகுமார் மிதுலகி அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனநாயக

## 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதான சிறுமிக்கு மதுபானம் அருந்தக் கொடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து சிறுமியை யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு பணிக்கப்பட்டது. எனினும் உரிய நேரத்தில் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை. இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் தலையீட்டில் சிறுமி யாழ். வைத்தியசாலையில் பரிசோதனைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இந்திய தொலைக்காட்சி படப்பிடிப்புக்காக பிரபல நடன இயக்குனர் பாபா பாஸ்கர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த நடன இயக்குனர், நல்லூர் மற்றும் குருநகர் பகுதிகளுக்கு சென்றிருந்தார்.
படம் யாழ்.விசேட நிருபர்

## போலி தங்க முத்துக்களை விற்பனை செய்யமுயன்றவர் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவில் போலி தங்க முத்துக்களை விற்பனை செய்ய முயன்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவில் போலி தங்க முலாம் பூசப்பட்ட முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் வெலிஓயா பகுதியைச் சேர்ந்த ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. ஜனகபுரம் வெலிஓயாவைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். போலி தங்க முலாம் பூசப்பட்ட 1400 முத்து மணிகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு வந்துள்ளார். இதன்போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு பொலிஸார்ர் போலி முத்துக்களை மீட்டுள்ளனர். சந்தேக நபரையும் சான்றுப்பொருட்களையும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்க தலைவருக்கு சிலை ' அமைக்கும் பணிகள் தடுத்துநிறுத்தம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா நகரில் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்க தலைவருக்கு சிலை அமைக்கும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு முன்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியில் தந்தை செல்வா சிலைக்கு அருகாமையில் முறையான அனுமதி பெறப்படாது ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் தலைவர் பத்மநாபாவின் சிலை கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவசர அவசரமாக நகரசபையால் நிறுவப்பட்டிருந்தது.

அத்துடன் அச்சிலைக்கு அண்மையில் மேலும் இரண்டு சிலைகளை நிறுவும் நடவடிக்கை அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் கலந்துரையாடினேன்.

இதனையடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் முறையான அனுமதி பெறப்படாது அவர்களது ஆட்சேபனை கடித்தை மீறி இன்றும் புதிய இரு சிலை கட்டுமாண நடவடிக்கை இடம்பெற்றதையடுத்து வவுனியா பொலிசில் அனுமதி பெறாது சிலை நிறுவியமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள பொலிஸார் தடை விதித்துள்ளதுடன், அங்கு வேலை செய்தவர்களையும் அனுப்பியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை



வவுனியா விசேட நிருபர்

வவுனியா குளத்தில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா குளத்தில் மிதந்த நிலையில் இளைஞனொருவரின் சடலம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (19) காலை மீட்கப்பட்டிருந்தது. இளைஞனின் மரணம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் இளைஞனின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. 25 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்ட இளைஞனாகவிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இளைஞன் இடது கையில் அம்மா என பச்சை குத்தியுள்ளார். கழுத்தில் சிவப்பு நூலும், ஒரு கையில் ஆலய நூலும், மற்ற கையில் நீல பட்டியும் அணிந்துள்ளார். எனவே, இளைஞன் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு அல்லது வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# முல்லைத்தீவில் அரச உத்தியோகத்தர்களுக்கு அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் சமூகசீர்கேடு





(கிளிநொச்சி குறூப் நிருபர்)

முல்லைத்தீவில் அரச உத்தியோகத்தர்களுக்கு அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டம் சமூக சீர்கேடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவில், கடந்த 2012 இல் நிர்மாணிக்கப்பட்டு இவ் வீட்டுத்திட்டம் எவராலும் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட காணப்படுகின்றது. பனிக்கன்குளம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 2012ஆம் ஆண்டு அரச காணியில் 54 காணித்துண்டுகள் வழங்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா கடனும் வழங்கப்பட்டது. எனினும் இதன்மூலம் அமைக்கப்பட்ட வீடுகளில் எவரும் குடியேறாத காரணத்தினால் பாழடைந்து காணப்படுவதோடு, அதில் சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட அரச உத்தியோகத்தகர்களுக்கு ஏ 9 பிரதான வீதியில் பனிக்கன்குளம் பகுதியில் 54 காணித்துண்டுகள் வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டன. ஆனால், இன்றுவரை இவ்வீடுகள் முழுமையாக அமைக்கப்படாத காரணத்தினால் அதில் எவரும் குடியேறவில்லை.

இதனால் இவ்வீடுகள் அனைத்தும் பாழடைந்து காணப்படுவதோடு வீட்டுக்குள் பெரியளவில் புற்றுகள் வளர்ந்து காணப்படுகிறது. அத்தோடு சமூக சீர்கேடுகளுக்கு வசதியாகவும் இவ்வீடுகள் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகம் என்பன உரிய கவனம் செலுத்தி வீடுகளை பெறாத வறிய மக்களுக்கு கிடைப்பதற்கு வழிசமைக்கவேண்டுமென பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயனை தொடர்பு கொண்டு வினவிய போது வீடுகள் யாருக்கு வழங்கப்பட்டதோ அவர்களை குடியேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் குடியேறாத சந்தர்ப்பத்தில் காணியற்ற பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.



யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை நிகழ்வு அண்மையில் யாழ்.கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து சிறப்பித்தார். 300றக்கும் அதிகமான இசை ஆர்வலர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம் யாழ்.விசேட நிருபர்)



அனுராதபுரம் மாவட்டத்தில் திறப்பனையில் அமைக்கப்பட்டுள்ள காலநிலை சீரமைவு விவசாய பயிற்சிப் பாடசாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த உலக வங்கியின் தெற்காசியாவுக்கான உப தலைவர் மார்ட்டின் ரெய்ஸருக்கு விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவினால் நினைவுச் சின்னமொன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேற்படி விவசாய பயிற்சிப் பாடசாலை உலக வங்கியின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# தாவீதின் வழி மரபில் தோன்றிய நேர்மையாளர் புனித யோசேப்பு

## மரியாளின் கணவர் புனித யோசேப்பு திருவிழா

கத்தோலிக்க திருச்சபை மரியாளின் கணவரான புனித யோசேப்பின் பெருவிழாவை ஒவ்வொரு வருடமும் மார்ச் 19ஆம் திகதி கொண்டாடி மகிழ்கின்றது.

புனித யோசேப்பு இறைவனின் மீட்புத் திட்டத்தில் புனித மரியாளைப் போன்றே அர்ப்பணிப்புடன் பங்களிப்பைச் செய்தவர்.

திருச்சபையானது புனித யோசேப்பை திருச்சபை முழுவதற்கும் பாதுகாவலராகவும் நல்ல இறப்பு, கற்பு மற்றும் கல்விக்கும் பாதுகாவலராக நியமித்து கௌரவிக்கின்றது.

தாவீதின் வழிமரபில் தோன்றிய யோசேப்பு தன்னுடைய மனைவி மரியாளிற்கு ஒரு சிறந்த கணவராக விளங்கினார் என்றாள் அது மிகையாகாது.

அன்றைய சமூகத்தில் நிலவிய சட்டத்தின் படி திருமணத்திற்கு முன்பாகவே மரியாள் கருவுற்றிருப்பது யோசேப்புக்கு தெரிய வந்தும் கூட அவளை கல்லால் எறிந்து கொல்ல யோசேப்பு முற்படவில்லை.

மாறாக பெருந்தன்மையோடு யாருக்கும் தெரியாமல் மரியாளை விலக்கி விட அவர் நினைக்கின்றார். பின்னர் கடவுளின் தூதர் அவருக்கு எல்லாவற்றையும் கனவில் வெளிப்படுத்திய பிறகே மரியாளை தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொள்கின்றார்.

மரியாளை தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொண்ட பிறகு யோசேப்பு அவருக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார். குழந்தை இயேசுவை ஏரோது மன்னன் கொல்லத் தேடியபோது குழந்தையையும் தாய் மரியாவையும் தூக்கிக் கொண்டு எகிப்துக்கு ஓடுகிறார். பின்னர் கொடுங்கோலன் ஏரோது இறந்த பிறகு அவர்களைக் கூட்டிக்கொண்டு தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்பி வருகின்றார்.

இவ்வாறு மரியாளின் உணர்வுகளை மதிக்கின்ற அவரை எல்லாவிதங்களிலும் சிறப்பாகப் பராமரிக்கின்ற ஒரு நல்ல கணவராக யோசேப்பு விளங்கினார். யோசேப்பு இயேசுவுக்கு ஒரு நல்ல வளர்ப்புத் தந்தையாக செயல்பட்டார். இயேசுவை உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் வளர்த்தெடுத்ததில் யோசேப்பின் பங்கை குறைத்து மதிப்பிட முடியாது.

இவ்வாறாக யோசேப்பு தன்னுடைய மனைவி மரியாவுக்கு ஒரு நல்ல கணவராகவும் இயேசுவுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியான வளர்ப்புத் தந்தையாவும் இருந்து செயல்பட்டு ஒரு கணவர் எப்படி இருக்கவேண்டும் ஒரு தந்தை எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக விளங்கினார்.



மரியாளின் கணவர் தூய யோசேப்பின் விழாவைக் கொண்டாடும் நாம் அவரிடமிருந்து சிறந்த வாழ்க்கைப் பாடங்களை கற்றுக் கொள்ள முடியும்.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் கணவன்மார்கள் தங்களுடைய மனைவியரிடத்தில், "நான் சொல்வதைதான் கேட்கவேண்டும், நான் சொல்வதைக் கேட்டுத்தான் நடக்க வேண்டும்" என்று அதிகாரம் செலுத்துவதைப் பார்க்கின்றோம். இன்னும் ஒரு சிலர் தங்களுடைய மனைவியருக்கும் உணர்வு இருக்கிறது என்பதை அறியாதவர்களாய், புரியாதவர்களாய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குடும்பம் எவ்வாறு சிறந்த குடும்பமாக திகழ முடியும்?

யோசேப்பு அவர் தன்னுடைய மனைவியான மரியாளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தார். அவருக்கே அதிக முன்னுரிமை தந்தார். இன்னாருடைய மனைவி இன்னார் என்று அழைக்கப்படும் இந்த காலகட்டத்தில் யோசேப்போ மரியாளின் கணவர் என்று தன்னுடைய மனைவியின் பெயராலேயே அடையாளப்படுத்தப்படுகிறார்.

இதிலிருந்தே அவர் எந்தளவுக்கு மனைவிக்கு முன்னுரிமை தந்தவர் என்பது தெளிவாகிறது.

மேலும் குழந்தை இயேசு கோவிலில் காணமாற்போய்.கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தான் பேசாமல் தன்னுடைய மனைவி பேசுவதற்கு முன்னுரிமை தருகிறார். இவற்றைப் பார்க்கும்போது அவர் தன்னுடைய மனைவிக்கு எந்தளவுக்கு முன்னுரிமை வாழ்ந்திருப்பார் என நாம் புரிந்துகொள்ளலாம்.

புனித யோசேப்பு தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இறை திருவுளத்திற்கு பணிந்து வாழ்ந்தவர்.

பரிசுத்த வேதாகமம் யோசேப்பைக் குறித்து குறிப்பிடும் செய்தி அவர் நேர்மையாளர் என்பதாகும் (மத் 1:19). நேர்மையாளர்கள் என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை ஆண்டவர் இயேசு சொல்லக்கூடிய இறுதித்தீர்ப்பு உவமையில் நாம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

ஆகவே, புனித யோசேப்பு நேர்மையாளராய் இருந்து எல்லோர்மீதும் இரக்கம் கொண்டு வாழ்ந்திருப்பார் என உண்மையாக நம்பலாம்.

எனவே மரியாளின் கணவரான புனித யோசேப்பின் விழாவைக் கொண்டாடும் நாளில் நாம் ஒவ்வொருவரும் பெண்களுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாக, அவர்களுக்கு முன்னுரிமை தருபவர்களாக, இறைத் திருவுளத்திற்கு பணிந்து நடப்பவர்களாக, நேர்மையாளர்களாக வாழ முயற்சிப்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

- எல்.எஸ்




# மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்



திருத்தந்தை பிரான்சிஸ்

*எமது பாவ இயல்புகளை மறைக்காது, வெளிப்படையாகவும் இயல்பாகவும் கடவுள் முன் அறிக்கையிட்டு அவரது இரக்கமுள்ள அரவணைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.*

*எல்லாவற்றையும் மன்னியுங்கள். இயேசுவின் அரவணைப்புள்ள பார்வையுடனும் அமைதியான புரிதலுடனும் எல்லாவற்றையும் மன்னியுங்கள் என்றும் அவ்வாறு நாம் மன்னிக்கும் போது விண்ணகத் தந்தையால் மன்னிக்கப்படுவோம் என்றும் திருத்தந்தை . தெரிவித்துள்ளார்.*

*கடந்த வெள்ளிக்கிழமை உரோமிலுள்ள புனித Maria delle Grazie ஆலயத்தில் தவக்காலத்திற்கான 24 மணிநேர ஆராதனை தொடக்கத் திருப்பலியைச் சிறப்பித்து மறையுரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*ஒப்புரவு அருளடையாளம் என்பது துன்புறுவதற்கான நேரமல்ல. மாறாக அமைதியைப் பெறுவதற்கான நேரம் என்று எடுத்துரைத்த திருத்தந்தை லூக்கா நற்செய்தி அதிகாரம் 18:914ல் வாசிக்கப்பட்ட பரிசேயர் வரிதண்டுபவர் செயல்முறைகள் பற்றியும் விளக்கினார்.*

*பரிசேயர் பெருமையுடன் தனியாக நின்று கடவுள் முன் தமது இதயத்தைத் திறப்பதற்குப் பதிலாக தமது பலவீனங்களை பகட்டுத்தனத்தில் மறைக்கிறார் என்றும் வரிதண்டுபவரோ வெகுதொலைவில் நின்று, கடவுள் முன் தன் பாவங்களை அறிக்கையிட்டு அவரது இரக்கத்தைப் பெறுகின்றார் என்றும் தெரிவித்துள்ளார்*

*நமது வாழ்வில் நாமும் பெருமிதம், பகட்டு, சாதனை, திறமை போன்றவற்றை முன்னிறுத்தி நமது பாவ இயல்புகளை மறைக்காது வெளிப்படையாக இயல்பாகக் கடவுள் முன் அறிக்கையிட்டு அவரது இரக்கமுள்ள அரவணைப்பைப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.*

*ஆயக்காரர் தொலைவில் நின்றதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை நமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட இடைவெளியை நாம் பாதுகாக்கும் போது உண்மையான உரையாடல் நடைபெறுகிறது என்றும் இது ஒவ்வொருவரையும் பாதிக்காமல் அவரவர் சுதந்திரக் காற்றை சுவாசிக்க அனுமதிக்கும் ஆரோக்கியமான இடைவெளி என்றும் எடுத்துரைத்தார்.*

*இந்த இடைவெளியானது உரையாடல் மற்றும் சந்திப்பை ஏற்படுத்தி தூரத்தைக் குறைத்து நெருக்கத்தை உருவாக்குகின்றது என்றும், வரிதண்டுபவரைப் போல இந்த வழியில் தொலைவில் நின்று கடவுளை நெருங்குவதை சாத்தியமாக்குகிறது என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.*

*வாழ்க்கையில் பலவீனம் மற்றும் அலட்சியத்தினால் நாம் செய்யும் தவறுகளுக்காக மனம் வருந்தும்போது கடவுள் நமக்காகக் காத்திருக்கிறார் என்று எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் ஒப்புரவு அருளடையாளத்தின்போது நமக்காகக் காத்திருக்கும் கடவுளுக்கு நம்மை பாவ இயல்பு என்னும் இருளில் மறைத்து கொள்ளாமல் நம் தவறுகளை கடவுளின் இரக்கத்திற்கு ஒப்படைப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.*

மெரினா ராஜ்

## 'இயேசு அழைக்கின்றார்' நற்செய்தி ஆராதனை








இலங்கைக்கு வருகை தந்திருந்த தமிழ்நாட்டின் 'இயேசு அழைக்கின்றார்' சுவிசேஷ நற்செய்தி சபையின் போதகர் டாக்டர் போல் தினகரன் கொழும்பு விஹாரமஹாதேவி உள்ளக அரங்கில் விசேட நற்செய்தி ஆராதனை நிகழ்வு ஒன்றை நடத்தினார். டாக்டர் போல் தினகரனின் குடும்பத்தினரையும் ஆசீர்வாத ஆராதனை நிகழ்வில் கலந்து கொண்ட விசுவாசிகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள்: அஷ்ரப் ஏ சமத்

# 'நானே உலகின் ஒளி என்னைப் பின் செல்பவர் இருளில் நடவார்'

*தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு நற்செய்தியானது குருடராகப் பிறந்தவரைப் பற்றியும் இயேசு அவரைக் குணமாக்கியதைப் பற்றியும் அழகாக விபரிக்கின்றது.*

*குருடராக இருந்த அந்த நபர் பிறவிலேயே குருடர் என்பதால் உலகம், பொருட்கள் அனைத்தையும் அறியாது இருந்தார். எல்லாமே அவருக்கு வெற்றிடமாகத்தான் இருந்தது.*

*சுய மதிப்பும் பிறரை மதிக்கும் தன்மையும் இழந்த நிலையில் இருந்தார். குருட்டுத் தன்மையால் மனித மாண்பு இழந்து எல்லோராலும் கைவிடப்பட்டவராக இருந்தார். அவருடைய தனித்தன்மையை அவனால் உணர முடியவில்லை.*

*ஒரு மகிழ்ச்சியான நாள் அவரது வாழ்வில் வந்தது. அவர் இயேசுவைச் சந்திக்கின்றார். இல்லை! இயேசு அவனைச் சந்திக்கின்றார். உமிழ்நீரைச் சேற்றில் கலந்து அவன் கண்களைத் தொட்டுப் பூசி சிலோவாம் குளத்தில் கழுவ வைக்கின்றார். அதனால் அவர் பார்வை அடைகின்றார். புதிய மனிதராகின்றார்.*

*அதனால் சுய மதிப்பு அவருக்குக் கிடைக்கிறது. மகிழ்ச்சி அவரது உள்ளத்தில் நிறைந்துவிட்டது. இதைக் கண்ட சிலருக்கு வியப்பாகவும், சிலருக்குக் குழப்பமாகவும், சிலருக்கு எரிச்சலாகவும், சிலருக்குப் பொறாமையாகவும் ஆகிவிடுகிறது.*

*எனவே அவரிடத்தில் பலவிதமான கேள்விகள் கேட்டு தொல்லை கொடுக்கின்றார்கள். யூத மக்கள் அவரது பெற்றோரிடம் அது சம்பந்தமாக வினவிய போது அவரையே கேட்டுக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தெரியாது என்று பயந்து சொல்லி விடுகிறார்கள்.*

*அவரது அக்கம் பக்கத்தார் அந்த உண்மையைப் பற்றிக் கவலைப்படாது அலட்சியப்படுத்தித் தள்ளி விடுகிறார்கள். ஆனால் பரிசேயர்களும், யூத குருக்களும் உண்மையை மறுக்கவும், மூடி மறைக்கவும் தொடங்குகிறார்கள். ஆனால் பார்வை பெற்றவரோ நான் குருடராக இருந்தேன். இப்போது பார்வை பெற்றேன். என்னைத் தொட்டவர் இறைவாக்கினராகத்தான் இருக்க வேண்டுமென்று ஆணித்தரமாகப் பயமின்றி உண்மையை எடுத்துரைக்கின்றார்.*

*ஏனெனில் ஆண்டவர் சொன்ன வார்த்தை நானே உலகின் ஒளி, என்னைப் பின் செல்பவர் இருளில் நடவார். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பார் (யோவா. 8:12) என்பது நிறைவேறுகிறது.*



*வாழ்க்கையில் இதுவரையிலும் குருடராக இருந்த இவருக்கு உடலின் பார்வை மட்டுமல்ல அவருடைய ஒழுக்க சம்பந்தமான, ஞான சம்பந்தமான, உள்ளம் சம்பந்தமான குருட்டுத் தன்மைகளினின்றும் அவர் மீட்கப்படுகிறார். இதனால் இவர் இயேசுவைக் கண்டுகொண்டது மட்டுமல்லாது இயேசுவை மெசியாவாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறார்.*

*புனித பவுல் அடிகளார் எபேசிய மக்களுக்கு எழுதும்போது நீங்கள் ஒளியின் மக்களாக வாழுங்கள் என எழுதுகிறார். ஏனெனில் ஒரு காலத்தில் பவுல் அடிகளாரே ஞானக் குருடராக திருச்சபையை எதிர்க்கின்ற தீவிரவாதியாக கிறிஸ்தவர்களையே கொலை செய்யும் ஒரு கொலையாளியாக இருந்தவர். ஆனால் இயேசு அவரைத் தொட்டு குணமாக்கிப் பார்வை கொடுத்துத் தன்னுடைய ஒப்பற்றப் பாத்திரமாக மாற்றிக் கொண்டார்.*

*ஐந்து இளைஞர்கள் ஆற்றங்கரையோரத்தில் வாழ்ந்த ஒரு குருவிடம் சென்றனர். அவரை நோக்கி, நாடு கெட்டுவிட்டது. லஞ்சம் பெருகிவிட்டது. ஊழல் மலிந்துவிட்டது. எனவே இந்த ஊழல் பெரிச்சாளிகளையெல்லாம் நாங்கள் தொலைத்துக்கட்ட விரும்புகிறோர் எங்களுக்கு அனுமதி கொடும் என்று கேட்டார்கள். குரு பேசாது இருள் நிறைந்த ஒரு சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். உள்ளே நுழைந்தவுடன் இருளை நீக்குங்கள் என்று ஆளுக்கு ஒரு வாரியல் கொடுத்தார்.*

*அவர்களால் இருளை நீக்க முடியவில்லை. அடுத்து உரத்த குரலில் சத்தமிட்டு இருளே ஓடுங்கள் என்று சொல்லச் சொன்னார். அதற்கும் இருள் மறையவில்லை. கையில் ஒரு கோலைக் கொடுத்து இருளை அடித்து விரட்டுங்கள் என்றும் சொன்னார். அப்படியும் முடியவில்லை. எனவே இளைஞர்கள் சலிப்பு அடைந்தார்கள். குரு மீது கோபமும் பட்டார்கள்.*

*ஆனால் குருவோ மிகவும் அமைதியாக பார்த்தீர்களா! இந்த நிலையில் உங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இப்போது பாருங்கள் இருள் மறையப் போகிறது என்றார். ஓர் இளைஞனிடம் நெருப்புப் பெட்டியைக் கொடுத்து பற்ற வைத்தார். ஒரு நொடியில் இருளானது மறைந்துவிட்டது. இதேபோல பிறரைக் குறை கூறுவதை விட நமது குறையை நீக்குவோம். ஒளியாகத் திகழ்வோம் என்றார்.*

*பிறவி குருடர், குருடராக இருக்கின்றவரையிலும் அவருக்கு எந்தப் பிரச்சனையும் வரவே இல்லை. ஆனால் என்று பார்வை பெற்றாரோ அன்று தொடங்கியது அவருக்கு ஆயிரம் பிரச்சனைகள். அதேபோல கிறிஸ்து என்ற ஒளியை நாம் அறியாது, இந்த ஒளியை பெறாத நிலையில் இருந்தால் ஒரு பிரச்சனையும் வராது. ஆனால் என்று கிறிஸ்துவை அறிகிறோமோ, கிறிஸ்துவாக மாறுகிறோமோ அன்று நமக்குப் பல பிரச்சனைகள் வரும். அதை எதிர்த்துப் போராடுவதுதான் கிறிஸ்தவ வாழ்வு.*

அருட்தந்தை முனைவர் ம. அருள்

# பதவி வெற்றிடங்கள்

## நீர்ப்பாசன அமைச்சிற்காக செயற்றிட்ட பணியாளர் குழாமை ஆட்சேர்த்தல்

உலக வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டமான காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA) இற்காக 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கை மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை ஆகியவற்றின் பிரகாரம் பின்வரும் பதவிக்காக ‘‘ஒப்பந்த அடிப்படையில்’’, செயற்றிட்ட முகாமைத்துவ பணியாளர் குழாமை ஆட்சேர்ப்பதற்காக தகைமை, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. அத்துடன் அமைச்சின் கீழுள்ள ஏனைய செயற்றிட்டங்களுக்கும் சேவையை பெறுவதற்காக ஆட்சேர்ப்பு நடைபெறும்.

மேலே குறிப்பிட்டுள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 01/2019 என்ற சுற்றறிக்கையின் 03 ஆம் அட்டவணையின் 03 ஆம் நிரலில் பதவிகளின் சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கில புலமை அத்துடன் அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு ஆகியன கட்டாயமான முன்தகைமைகளாகும். வெளிநாடுகளினால் இலங்கையில் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் வேலை அனுபவம் மற்றும் உரித்தான துறையிலுள்ள வேலை அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

| இல. | பிஎஸ் வகுதி | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | ஏற்புடையதான சுற்றறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பிஎஸ் 3 | பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ விஷேடத்துனர் | 01 | முசேதி சுற்றறிக்கை 1/2019 |

மேலதிக தகவலுக்கும் மேலே குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையை பார்வையிடவும் **www.irrigationmin.gov.lk** என்ற இணையதளத்தையும் நிதி அமைச்சின் இணையதளத்தையும் பார்வையிடவும்.

கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை 2023 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்புவதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரையும் குறிந்துரைக்கவும்.

**பதில் கடமையாற்றும் செயற்றிட்டப் பணிப்பாளர்,**
காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை,
இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு-05.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவார்கள். எவ்வகையிலும் ஆதரவு தேடுவது தகைமையற்றது என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு.**

திகதி: 20.03.2023.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்புக் கட்டமைப்புகளின் நிர்மாணிப்புக்காக பொருட்கள் மற்றும் வாடகை அடிப்படையில் இயந்திராதிகளை வழங்குதல்

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கரையோரப் பாதுகாப்பு கட்டமைப்புகளின் நிர்மாணிப்புக்காக பொருட்கள் மற்றும் வாடகை அடிப்படையில் இயந்திராதிகளை வழங்குவதற்காக தகைமையுள்ள மற்றும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒவ்வொரு பெறுகையும் தனியான மற்றும் சுயாதீன பெறுகை செயற்பாடாகும்.

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இல: | வழங்கல் விபரம் | விலைமனுப் பிணை | | மாவட்டம் | தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|
| | | செல்லுபடிக் காலம் | பெறுமதி | | |
| பஹல கட்டுநேரிய 250 மீற்றர் ரிவட்மன்ட் மதிலை புனரமைத்தல் CCD/CD/2023/57 | கலப்புக் கல் (2,250 கி.கிராம்) 800 மீற்றர் கியூப் வழங்குதல் | 2023-07-04 | ரூபா 36,000.00 | புத்தளம் | பிராந்திய பொறியியலாளர் (கொழும்பு வடக்கு) 031-2238400 |
| | (1.0) தொன் சக்கைக்கல் 820 தொகுதிகள் வழங்குதல் | | ரூபா 25,000.00 | | |
| களுத்துறை கெலிடோ 200 ரிவட்மன்ட் மதிலை நிர்மாணித்தல் (கட்டம் 01) CCD/CD/2023/66 | 20 தொன் எக்ஸ்கவேட்டர் 240 மணித்தியாலங்கள் | 2023-07-04 | ரூபா 34,000.00 | களுத்துறை | பிராந்திய பொறியியலாளர் (கொழும்பு தெற்கு) 011-2658930 |
| | 01 கியூப் லோடர் 250 மணித்தியாலங்கள் | | ரூபா 26,000.00 | | |
| | 03 கியூப் டிப்பர்கள் 30 நாட்கள் | | ரூபா 12,000.00 | | |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு நடைமுறை மூலம் இந்த விலைக்கோரல்கள் இடம்பெறும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும். மேலும் 1987ஆம் ஆண்டில் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, விலைமனுதாரரினால் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவம், விலைமனுப் பிணை முறி மற்றும் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5 ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் தேவையான மேலதிக தகவல்களை கொழும்பு-10, மாளிகாவத்தை, புதிய செயலகம், 4ஆம் மாடி, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரிடமிருந்து (கரையோர அபிவிருத்தி) (D.C.) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், எந்தவொரு வேலை நாளிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை விலைமனுப் படிவங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுதாரர்கள் குறித்த உத்தியோகத்தர்களுடன் 011-2472622, 011-2322654 (நீடிப்பு - 211) எனும் தொலைபேசி இலக்கங்களில் மற்றும் 011-2438005 எனும் தொலைநகல் இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

6. வியாபார கடிதத் தலைப்பிலான ஒரு வேண்டுதல் கடிதமொன்று மேற்படி முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளருக்கு (கரையோர அபிவிருத்தி) (D.C.) சமர்ப்பிக்கப்பட்டு மீளளிக்கப்படாத கட்டணமான மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் (ரூ. 3,500.00) செலுத்தப்படுவதன் பேரில் 2023-03-22ஆம் திகதி முதல் 2023-04-03ஆம் திகதி 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நிர்மாணப் பொருட்கள், இயந்திராதிகளை வழங்குவதற்கான விலைமனுக்களை 2023-04-04ஆம் திகதி 1330 மணித்தியாலத்திற்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம், 04ஆம் மாடி, புதிய பொதுச் செயலாளர் அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

8. குறித்த முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் ஒப்பந்தத்தின் பெயர், ஒப்பந்த அடையாள இலக்கம் மற்றும் வழங்கல் மூலப்பிரமாணம் (நிர்மாணப் பொருட்கள், இயந்திராதிகள்) என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

9. குறித்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் கொழும்பு-10, மாளிகாவத்தை, புதிய பொதுச் செயலாளர் அலுவலகம், 04ஆம் மாடி, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்திற்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

10. சகல விலைமனுக்களுடனும் வழங்க வேண்டிய விபரங்கள் உட்பட விலைக்கோரல் பிணை முறி, வங்கிப் பிணை முறி அல்லது பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மூலமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறியானது தரப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட காலம் வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். குறித்த விலைக்கோரல் பிணையை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம்.

11. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்,**
**4ஆம் மாடி, புதிய பொதுச் செயலாளர் அலுவலகம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொலைபேசி: 011-2449754 (Ext-211)/ 011-2472622**
**தொலைநகல்: 011-2387920 / 011-2438005.**

---

**உயர்திரு சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் மேலான சமூகம்**
**சிதம்பரம், தமிழ்நாடு, இந்தியா.**

**OP 15/2019**

விஸ்வநாதன்
s/o மணி,
79/115, கிழக்கு வீதி,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்,
தமிழ்நாடு-608001,
இந்தியா.
மனுதாரர்

மனோரஞ்சிதம்
D/o தியாகராஜன்,
கரவெட்டி,கரணவாய் கிழக்கு,
ஜோதிடர் வளைவு,
வட மாகாணம்(யாழ்ப்பாணம்),
இலங்கை.
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி நம்பரில் மனுதாரர் 13(1) of HMA, 1955 பிரகாரம் தங்களுக்கு (எதிர்மனுதாரர்) எதிராக மனு தாக்கல் செய்து OP 15/2019 என நம்பராகி 05.04.2023 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் மீது தங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால், மேற்படி தேதியில் நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவும். தவறினால் மனுதாரர் கோரியவாறு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகிவிடும் என்பதனை இதன்மூலம் தெரியப்படுத்துகிறோம்.

**மனுதாரர் வழக்கறிஞர்**
பா. கீதா B.A.,B.L.
36,அம்பலத்தாடி மடம் தெரு,
சிதம்பரம்-608001, இந்தியா.

---

# பகிரங்க அறிவித்தல்

**ஹேலீஸ் கொன்சியூமர் புரடக்ட்ஸ் லிமிட்டட் (கம்பனி இல. PB 627)**
**மற்றும்**
**ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் லைட்டிங் (பிறைவேட்) லிமிட்டட்**
**(கம்பனி இல PB 690 PV)**

**ஹேலீஸ் கொன்சியூமர் புரடக்ட்ஸ் லிமிட்டட்** (கம்பனி இல. PB 627) மற்றும் **ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் லைட்டிங் (பிறைவேட்) லிமிட்டட்** (கம்பனி இல PB 690 PV) ஆகிய இரு நிறுவனங்களும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (“சட்டம்”) 242ஆம் பிரிவிற்கு இணங்க ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன என்பது சட்டத்தின் 244(3)ஆம் பிரிவுக்கு அமைய **இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் **ஹேலீஸ் கொன்சியூமர் புரடக்ட்ஸ் லிமிட்டட்** என்பதாக இருக்கும். கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட நிறுவனமாகிய **ஹேலீஸ் கொன்சியூமர் புரடக்ட்ஸ் லிமிட்டட்டின்** பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்படும் நிறுவனமொன்றின் ஏவரேனுமொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்கியவர், அல்லது ஒருங்கிணைக்கப்படும் ஒரு நிறுவனம் கடப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரு நபர், ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் வழமையான வேலை நேரங்களில் பார்வையிட முடியும்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2023 மார்ச் 21

ஹேலீஸ் கொன்சியூமர் புரடக்ட்ஸ் லிமிட்டட் மற்றும்
ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் லைட்டிங் (பிறைவேட்) லிமிட்டட்
சபைகளின் கட்டளைப்படி
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்

---

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460வது அத்தியாயம்) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது இலக்கம்:** THI/LND/L2/ACQVI/119
**காணி அமைச்சின்**
**தொடர்பு இலக்கம்:** 4-3/9/2014/WS/02

இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியை கல்கெடிய நிலக்கீழ் நீர்த்தேக்கத்தையும் நிலையப் பொறுப்பாளருக்குரிய உத்தியோகபூர்வ விடுதி யையும் நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2321/49 மற்றும் 2023.03.02ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தெற்கு |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலகம் | : திஹகொட |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 349B, கிதலகம மத்திய |
| கிராமம் | : கிதலகம |
| ஆரம்ப திட்டப்பட இலக்கம் | : ஆ.தி. மார 2909 |
| துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : 0.1260 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்/**
**காணி சுவீகரிப்பு அதிகாரி**
**திஹகொட பிரதேச செயலகப் பிரிவு.**

2023.03.20ஆம் திகதி
**திஹகொட பிரதேச செயலகத்தில்**

---

# கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் பிஎல்சி

(PQ00255274)

கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் பிஎல்சியின் ஊழியர்கள் , பங்குதாரர்கள் மற்றும் அனனத்து பங்கு உறுப்பினர்களுக்கான அறிவிப்பு

கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் பிஎல்சியின் ,யக்குநர்கள் குழுவில் பின்வரும் ஒன்பது ,யக்குநர்கள் மட்டுமம உள்ளனர் என்பனதத் ததரிவித்துக் தகாள்கிமறாம்.

01. மக. சுசில் சாந்த வீரமசகர
02. டி.எல். சமரவிக்ரம
03. எம்.ஜி. உதய புஷ்ப குமார
04. எ. பசில் மசனாதீர
05. டி. திலகவர்தன
06. பி.பி. ஜயரத்ன
07. எம். விதானகமமக
08. எ.எ. ஜயந்த அமரசிங்க
09. டி.பி. மேமந்த குமார

கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் பிஎல்சி

---

# விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

**கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்**

இலக்கம் 805, பிரஸ்டன் மெனர் ட்ரைவ். மிஸ்ஸிஸ்சவுகா, ஒன்டாரியோ, L5M, 3A1, கனடா எனும் முகவரியைச் சேர்ந்த அமரர் Tuan Uvaiz Pallie அவர்களின் இறுதி விருப்பாவணத்தைப் பொறுத்து கனடாவின் ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் வழங்கிய. 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சிவில் நடைமுறை விதித் தொகுப்புச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தத்திற்குட்பட்ட சிவில் நடைமுறை விதித்தொகுப்பு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழான இறுதி விருப்பாவணத்துடனான வெளிநாட்டு புரோபேட் அனுமதிப் பத்திரத்தின் மீள் முத்திரையிடல் விண்ணப்பம் தொடர் பானது.

**இறந்தவர்**

**விருப்பாவண வழக்கு எண்: DTS/286/2022**

Gnei Raleena Pallie
இலக்கம் 42, ரொட்ரிகோ மாவத்தை,
நாவல

**மனுதாரர்**

இலக்கம் 805, பிரஸ்டன் மெனர் ட்ரைவ், மிஸ்ஸிஸ்சவுகா, ஒன்டாரியோ L5M, 3A1, கனடா எனும் முகவரியைச் சேர்ந்த அமரர் Tuan Uvaiz Pallie அவர்களின் இறுதி விருப்பாவணத்தைப் பொறுத்து கனடாவின் ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் பதிவாளரினால் மேற் பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரருக்கு வழங்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரத்தின் மீள் முத்திரையிடலுக்கான விண்ணப்பமானது இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னர் சிவில் நடைமுறைச் சட்டத்தின் 554 (U) பிரிவின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

2023ஆம் ஆண்டு மார்ச் 21 திகதியன்று

**டி.ஏ.டீ.எஸ். ஹெகோட,**
**மேற்கூறப்பட்ட மனுதாரரின் சட்டத்தரணி**

---

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the Sunday Observer

---

கம்பஹா மாவட்டம், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவு, இலக்கம் 209, வடக்கு பொல்லாத்தே கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும், மும்தாஜ் ரோசைன் டிவொன்சோ ஆகிய நான், இனிமேல் எனது பெயரை “ரொசைன் டிவொன்சோ திஸாநாயக்க” எனப் பயன் படுத்துவேன் என்று இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும், அதன் மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கிறேன்.

**பெயர் மாற்றம்**

புதிய காத்தான்குடி தெற்கு (167C) பிரிவில் இல. 04.A.H. வீதி, தக்வா நகரில் வசிக்கும் நல்லரெத்தினம் ஆயிஷா ஆகிய நான் எனது மகனுடைய பெயர் ஸ்ரீகுமரன் மிதுனேஷ் என்பதை இன்று முதல் அப்துர் ரஹ்மான் என பெயர் மாற்றிக் கொண்டேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரைப் பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**ந.ஆயிஷா (தாய்)**

Repeat Your ad For Better Offers

---

**பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

# அலுவலகம்/களஞ்சியசாலை இடவசதி வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு

கொழும்பு -10, தெமட்டகொட, ஸ்ரீ தம்ம மாவத்த, இல. 257இல் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இரண்டு புளொக்குகளாக 6715 சதுர அடி கொண்ட ஓர் வர்த்தக கட்டிடம் 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

2023 ஏப்ரல் 18ம் திகதி அல்லது அதற்கு முன் அடையுமாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையல் ‘அலுவலக/ களஞ்சிய இடவசதி வாடகைக்கு/குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள்’ என்று குறிப்பிட்டு கொழும்பு -10 ஸ்ரீ தம்ம மாவத்த, இல. 257. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், பெறுகைக் குழுவின் தலைவருக்கு பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் அதே தினம் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

2023 மார்ச் 22ம் திகதி எந்த வேலை நாட்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 இற்கு இடையில் காணப்படும் களஞ்சியசாலை/ அலுவலக இடவசதிகளை உங்களுக்கு பரிசீலிக்கலாம்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் கொண்டிருப்பார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்,**
**257, ஸ்ரீ தம்ம மாவத்த, கொழும்பு -10.**

**தொடர்புகள்: 011 5875895**

## பூனாகலையில் பாரிய மண்சரிவு

# 40 வீடுகள் சேதம், 07 பேர் காயம் 62 குடும்பங்கள் இடம்பெயர்வு



**ஹாலிஎல விசேட நிருபர்**

பூனாகலை, கொஸ்லந்த, கபரகல தோட்டத்தில் மண்சரிவினால் 10 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் காயமடைந்த ஐந்து பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கொஸ்லந்த பூனாகலை வீதியில் கடந்த 19ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவால் இரண்டு வரிசை தோட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. இங்கு வசிக்கும் சுமார் இருபது குடும்பங்களைச் சேர்ந்த மக்களும், அருகிலுள்ள வீடுகளில் வசிப்பவர்களும் பாதுகாப்புகருதி பூனாகலை இலக்கம் 03 தமிழ் ஆரம்பப் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை காரணமாக வரிசை வீட்டின் பின்புறமாகவுள்ள செங்குத்தான சரிவுகளுடன் கூடிய பெரிய மலைப்பகுதியில் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட வீடுகளில் வசித்த 5 பேர் காயமடைந்து கொஸ்லந்த மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹல்துமுல்ல பிரதேச செயலகம் மற்றும் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.




பண்டாரவளை பூனாகலை தோட்ட கபரகல பிரிவில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்தார். (படம் ஊவா சுழற்சி நிருபர்)

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் அவசியம்

## பாராளுமன்றங்களுக்கான கூட்டத்தில் இந்திய சபாநாயகர் ஓம் பிர்லா

ஐ.நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அது பிற்போடப்படுவதை அனுமதிக்க முடியாது என இந்திய பாராளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

பஹ்ரெய்ன் மனமா நகரில் நடைபெற்ற பாராளுமன்றங்களுக்கான அமைப்பின் 146ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய சபாநாயகர், இந்திய ஜனநாயகத்தின் சிறப்புகள் பற்றி எடுத்துரைத்ததோடு ஐ.நா. பாதுகாப்பு சபை நடவடிக்கைகளில் சீர்திருத்தங்கள் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தவும் செய்தார்.

140 நாடுகளின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் 'சகிக்க முடியாமைக்கு எதிரான போராட்டம்' என்ற தலைப்பில் அவர் உரை அமைந்திருந்தது. எதிர்கால உலக செயற்பாடுகள் செம்மையாக நடைபெறுவதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். இதைத் தொடர்ந்தும் தவிர்ப்பதற்கில்லை என்று குறிப்பிட்ட அவர், இந்தியாவின் உலகளாவிய கொள்கையில் இச்சீர்திருத்தமும் அடங்கியுள்ளது என்றார்.

இந்திய ஜனநாயகத்தின் செழுமைக்கும் அதன் பல் கட்சி ஜனநாயகம் பெரும் பலமாக உள்ளது என்றும் 90 கோடி வாக்காளர்களைக் கொண்ட இந்தியாவில் ஒவ்வொரு தேர்தலின் போதும் அதிகரிக்கும் வாக்காளர் எண்ணிக்கை மக்களின் ஜனநாயகத்தின் மீதான பற்றுதலையே வெளிப்படுத்துகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஜனநாயகம் செத்துவிட்டது என்றும் பாராளுமன்றத்தில் பேசுவதற்கான உரிமை மறுக்கப்படுவதாகவும் ராகுல் காந்தி கருத்து வெளியிட்டு அது சர்ச்சையான பின்னர் இந்திய பாராளுமன்ற ஜனநாயகத்தை புகழ்வதாக இந்த உரை அமைந்திருக்கிறது என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பருவநிலை மாற்றம், பாலின சமத்துவம், கோவிட் போன்ற முக்கியமான விஷயங்களை இந்திய பாராளுமன்றம் விவாதிக்கிறது என்பதோடு பாராளுமன்றத்தில் கருத்து சுதந்திரம் உண்டென்றும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு சபையில் இடமளிக்கப்படுகிறது என்றும் தன் உரையில் சபாநாயகர் ஓம்பிர்லா தெரிவித்திருந்தார்.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



106 கார்கள் விற்பனைக்கு

UP JF-2838 KIA SPECTRA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018169

113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

WP CAN-2777 SUZUKI WAGON R CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018171



117 வேன்கள் விற்பனைக்கு

252-0882 NISSAN SERENA VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018162



119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

NWLM-6690 LANKA ASHOK LEYLAND 1616 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018163

SP LG-4536 LANKA ASHOCK LEYLAND 1613 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018166

SP LJ-5111 LANKA ASHOK LEYLAND 1613 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018167

WP DAE-3389 TATA XENON S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடக ல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018172



122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BJB 7100 RANOMOTO PATTAYA DOUBLE POWER BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018164



124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

UP RC-7875 JOHN DEERE TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 018170

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


## புதுடில்லி நொய்டாவில்

# 'ஒரு மேசை அலுவலகத்'தையாவது அமைக்கப் போட்டியிடும் வர்த்தகர்கள்

தகவல் தொழில்நுட்ப மற்றும் புதிய தொழில்துறைகளுக்கும் பெயர்பெற்ற புதுடில்லியின் நொய்டா மற்றும் குருகிராம் தொழில் நகரங்களின் நெரிசலை சமாளிக்க புதியமுறை செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இந் நகரங்களில் ஒரு தொழிலை நடத்த சிறிய இடத்தை பிடித்துக் கொள்வதென்பது சிரமமானது என்பதற்கப்பால் செலவும் அதிகம் என்பதால் பலர் தொழில் தொடங்கும் வசதியின்றி இருந்தனர். தற்போது ஒரு சிறிய இடத்திலேயே இரண்டு மூன்று மேசைகளை போட்டு வெவ்வேறு தொழில்களை செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதால் சிறிய தொழில் முயற்சியாளர்கள் இதை தமக்கான வாய்ப்பாகக் கருதுகின்றனர்.

இணைந்து பணியாற்றும் முறை சாத்தியமாகி இருப்பதால் தனது பொருளாதார வரையறைக்குள் செலவுகள் அடங்கிப் போவதோடு தொழில் விருத்தியும் ஏற்பட்டு வருவதாக காஸியாபாத்தைச் சேர்ந்த ரேணுகபூர் என்ற பெண் வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

முன்னர் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களே காணப்பட்ட நொய்டா மற்றும் குருகிராமில் தற்போது பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் தொடர்பான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் பிரதான இடங்களாக இருப்பதால் தொழில்முயற்சியாளர்கள் இங்கே தமது அலுவலகங்களை ஒரு சிறிய இடத்திலாவது நடத்துவதற்கு விரும்புகிறார்கள்.

# வருடாந்த பொதுக்கூட்டம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் 32ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை, இலக்கம் 120/15, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 இல் உள்ள என்ஜினியர்ஸ் இன்ஸ்ரிரியூட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்கான நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக, சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியாத் கப்ராலுடன் 0777560708 என்ற அலைபேசி இலக்கம் மூலமாக தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் இணையத்தள முகவரி: www.aaupcc.org

# பிற்படுத்தப்பட்டோர் உயர் பதவிகளை வகிக்க இந்திய அரசியலமைப்பு வழிவகுத்துள்ளது

## ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தில் பிரதிநிதிகள் புகழாரம்

பழங்குடி இனத்தவரான திரவுபதி முர்மு ஜனாதிபதியாகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நரேந்திர மோடி பிரதமராகவும் பதவி வகிக்க முடிந்திருப்பது இந்திய அரசியலமைப்பின் சிறப்பையே வெளிப்படுத்துவதாகவும் பல்தரப்பட்ட வகுப்புகளைச் சேர்நதவர்களும் தமது சமூக வேலிகளைத் தகர்த்தெறிந்து வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள அரசியலமைப்பில் வழி இருப்பதாகவும் 52 ஆவது ஜெனீவா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி சூழல் பாதுகாப்பு அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி சாய் சம்பத் குறிப்பிட்டார்.

தலித் பிரிவைச் சேர்ந்த ரோகிணி என்ற மாணவி கலாநிதி பட்டத்துக்கான ஜெனீவாவில் கற்பதாகவும் இந்திய அரசு அவரது கல்விக்காக ஒரு கோடி ரூபாவை கல்வி உதவித் தொகையாக அளித்திருப்பதாகவும் குறிப்பிட்ட அவர், இந்தியாவின் இருபது கோடி தலித்துகளின் பிரதிநிதியாக தான் இம்மாநாட்டில் உரையாற்றுவதாக மேலும் குறிப்பிட்டார். இந்தியாவின் அயல் நாடுகளில் வசிக்கும் சிறுபான்மையினரைவிட இந்திய தலித்துகளில் நிலை மோசமானதல்ல என்றும் அவர் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

ஆபிரிக்க சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இங்கு உரையாற்றிய சோமையாஜி 1947 சுதந்திரத்தின் பின்னர் மனித உரிமைகள் வலுப்பெறும் பொருட்டு பல நடவடிக்கைகள் இந்தியாவில் எடுக்கப்பட்டிருப்பதாகவும் எல்லா குடிமக்களுக்கும் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டதோடு பால் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு கணவனால் மனைவி வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதும் குற்றமாக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். பெண்கள் தொழில் செய்யும் இடங்களில் நடைபெறக் கூடிய பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் புதிய சட்டம் அமுலுக்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# வங்க தேசத்துக்கு இந்தியாவில் இருந்து குழாய் வழி டீசல்

## குழாய்வழி டீசல் ஒரு வரப்பிரசாதம் என்கிறார் வங்கப் பிரதமர்

இந்தியாவில் இருந்து குழாய் வழியாக வங்க தேசத்துக்கு டீசலை அனுப்பும் திட்டம் கடந்த சனிக்கிழமை இரு நாட்டு தலைவர்களினால் காணொளி காட்சியூடாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் அசாமில் இருந்து வட வங்க தேச கார்பட்டிபூருக்கு குழாய் வழியாக டீசல் அனுப்பப்படும். இதுவரை வருடமொன்றக்கு அறுபது ஆயிரம் முதல் 80 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் ரயில் மார்க்கமாகவே பங்களாதேசத்துக்கு அனுப்பப்பட்டு வந்தது. கடந்த 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குழாய் அமைப்பு பணிகள் 377 கோடி ரூபா செலவில் 12 கி.மீ. தூரத்துக்கு மேற்கொள்ளப்பட்டது. வங்கதேசப் பகுதியில் அமைக்கப்பட்ட 127 கி.மீ. குழாய் அமைப்புக்கான நிதியை இந்தியாவே வழங்கியிருந்தது.

திட்டத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பிரதமர் மோடி குறைந்த செலவில் டீசலை வங்கதேசம் பெறக் கூடியதாக இருப்பதால் அந்நாட்டின் விவசாய மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு இது வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்ததோடு இரு தரப்பு பெற்றோலிய வர்த்தகம் ஒரு பில்லியன் டொலர் அளவையும் தாண்டிவிட்டதாகக் குறிப்பிட்டார்.

வங்க பிரதமர் ஷேக்ஹஸீனா தனது உரையில் பல வளர்ந்த நாடுகள் உக்ரேன் யுத்தம் காரணமாக பொருளாதார பாதிப்புகளை அடைந்துள்ள சூழலில் வங்க மக்களின் எரிசக்தி தேவையை இக்குழாய்த் திட்டம் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது என்று கூறினார்.

வங்க தேசம் 160 மெகாவோட்ஸ் மின்சாரத்தை இந்தியாவிடமிருந்து பெற்று வருகிறது. சிட்டாகொங் மற்றும் மொங்லா துறைமுகங்களையும் சிட்டாகொங் மற்றும் சைல்நெட் சர்வதேச விமான நிலையங்களையும் இந்தியா உபயோகித்துக் கொள்ள வங்க பிரதமர் ஏற்கனவே இடமளித்ததோடு வங்கத்தின் நூறு பொருளாதார வலயங்களில் முதலீடு செய்யுமாறு இந்திய வர்த்தகருக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.

# விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் விருது வழங்கும் விழா

கனடாவில் உள்ள விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பு, இலங்கையில் பல் துறைகளில் சாதனை படைத்த 50க்கும் மேற்பட்ட பெண்களை விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ள நிலையில், இந்த விருது வழங்கும் விழா கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இன்று 21ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் தலைவி சசி நரேனின் ஏற்பாட்டில் கோலாகலமாக நடைபெறவுள்ள இவ் விழாவில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.


சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) 9ஆம் பிரிவின் கீழ் திரு. கே. மாரிமுத்து என்பவருக்குப் பதிலாக திரு. செந்தில் தொண்டமான் அவர்கள் தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தி தொழிலுக்கான சம்பளச்சபையின் ஊழியர்களின் பிரதிநிதியாக கௌவர தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சம்பளச் சபைகள் ஒழுங்கு விதிகளின் 30ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியமனம் 2023.12.31 வரைக்குமே செல்லுபடியாகும்.

**ஆர்.பி.ஏ. விமலவீர**
**செயலாளர்,**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு,**

**'மெஹவர பியெச',**
**கொழும்பு -05.**
2023ஆம் ஆண்டு 03 மாதம் 17ஆந் திகதி

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) 9ஆம் பிரிவின் கீழ் திரு. ஐ.எப்.ஆர்.எஸ். தேவதாஸ், திரு. சண்முகம் சுப்பையா மற்றும் சட்ட வழக்கறிஞரான திரு. சஞ்ஜய கமகே என்பவருக்குப் பதிலாக திரு. மாலக வீரசிங்க ஆராய்ச்சிகே, திரு. கயான் ஓவிரிகல மற்றும் திரு. வீ. ஜீவாநந்தராஜா ஆகியோர் தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தி தொழிலுக்கான சம்பளச்சபையின் நியமன உறுப்பினர்களாக கௌவர தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை 1971.06.04ஆந் திகதிய 14961ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் 30ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியமனம் 2023.12.31 வரைக்குமே செல்லுபடியாகும்.

**ஆர்.பி.ஏ. விமலவீர**
**செயலாளர்,**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு,**

**'மெஹவர பியெச',**
**கொழும்பு -05.**
2023ஆம் ஆண்டு 03 மாதம் 17ஆந் திகதி

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) 9ஆம் பிரிவின் கீழ் திரு. எச்.ஓ. தேவ்மித் ரொஹான, திரு. ஐ.டபிள்யு. சந்திரசிறி மற்றும் சட்ட வழக்கறிஞரான திரு. சஞ்ஜய கமகே என்பவர்களுக்குப் பதிலாக திரு. ஜோசப் தேவ மாக்கிரட், திரு. மாலக வீரசிங்க ஆராய்ச்சிகே மற்றும் திரு. கபில பிரியந்த செனவிரத்ன ஆகியோர் இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச்சபைக்கான நியமன உறுப்பினர்களாக கௌவர தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை 1971.06.04ஆந் திகதிய 14961ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் 30ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியமனங்கள் 2023.12.31 வரைக்குமே செல்லுபடியாகும்.

**ஆர்.பி.ஏ. விமலவீர**
**செயலாளர்,**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு,**

**'மெஹவர பியெச',**
**கொழும்பு -05.**
2023ஆம் ஆண்டு 03 மாதம் 17ஆந் திகதி

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண மக்கள் இழந்த காணிகளை மீளப்பெறும் பொறிமுறை

கல்முனை, அட்டாளைச்சேனை குறூப் நிருபர்கள்



கிழக்கு மாகாண மக்களின் இழக்கப்பட்ட காணிகளை மீளப் பெறும் பொறிமுறை தொடர்பாக ஆராயும் செயலமர்வொன்று நிந்தவூர் பிரதேசத்திலுள்ள தோப்புக்கண்ட விடுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.

மக்கள் காணி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளரும் மனித எழுச்சி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வின் போது, தேசிய காணிக்கொள்கைக்கான பரிந்துரைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, எஸ்.எம்.எம்.முஷாரப், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.எம்.நௌஷாத் சந்திரதாஸ கலப்பதி உட்பட கிழக்கு மாகாண மூவின சமூகங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காணிப்பிரச்சினை தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்களுடனும் போதிய தெளிவுடனும் தான் இருப்பதாகவும் இது தொடர்பாக பல கட்டச் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அத்துடன், சில காணிகளை தான் சட்ட ரீதியாக அணுகி விடுவித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட காணிப்பிரச்சனை தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின்

உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும் 'வரப்புயர' எனும் பெயரில் தொகுக்கப்பட்ட காணொளியொன்றும் காண்பிக்கப்பட்டது.

## யானைகளின் அட்டகாசத்தால் பொத்துவிலில் வீடொன்று சேதம்

ஒலுவில் விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் ஆத்திமுனை சர்வோதயபுர கிராமத்தினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) நுழைந்த காட்டு யானைகள், அங்கிருந்த வீடொன்றை முற்றாகச் சேதமாக்கியுள்ளது.

இருப்பினும், அவ்வீட்டில் உறங்கிக்கொண்டிந்தவர்கள் தெய்வதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

அண்மைக்காலமாக பொத்துவிலின் சர்வோதயபுரம், செங்காமம் ஆகிய கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதால், அக்கிராமங்களிலுள்ள தாம் இரவு வேளைகளில் அச்சத்துடன் இருப்பதாக, அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி கிராமங்களைச் சேர்ந்த தாம், மாலை வேளைகளில் தங்களின் குடியிருப்புகளை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களை நோக்கி தமது பிள்ளைகளுடன் சென்று மறுநாள் காலையில் வீடு திரும்புவதாகவும், அம்மக்கள் தெரிவித்தனர்.

குடியிருப்புகளையும் வீட்டுத் தோட்டங்களையும் சேனைப்பயிர்களையும் யானைகள் சேதப்படுத்தி வருவதால், தாம் பாதிக்கப்படுவதாகவும், அம்மக்கள் தெரிவித்தனர்.

தமது கிராமங்களில் யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டுமெனவும், அக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஸ்ரீதில்லையம்பல ஆலய கும்பாபிஷேகம்

மணல்சேனை நிருபர்

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு, துறைநீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ள நிலையில், விநாயகப்பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதல் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்துடன், விநாயகப்பெருமானுக்கான சங்காபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கிரியைகளானவை ஆலயக் குரு சிவஸ்ரீ இரத்தினசபா சசியின் ஒழுங்கமைப்பிலும் பிரதிஸ்டா பிரதமகுரு ஈசான சிவாச்சாரியார் கலாபூஷணம் சிவஸ்ரீ க.கு.மோகனாநந்த குருக்களின் தலைமையிலும் நடைபெறவுள்ளதாக, மேற்படி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## பொத்துவிலில் இரத்ததான நிகழ்வு

பாலமுனை விசேட நிருபர்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் பொத்துவில் ஹுதா இரத்ததானம் வழங்குவோர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு, கடந்த சனிக்கிழமை பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

மேற்படி அமைப்பின் தலைவரும் ஊடகவியலாளருமான எம்.எஸ். சம்சுல் ஹுதா தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் ஹுதா அமைப்பின் உறுப்பினர்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் கழக உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இரத்ததானமளித்தனர்.

இந்த வைத்தியசாலைக்கு தொடர்ந்து இரத்ததான நிகழ்வுகளை நடத்தவுள்ளதாகவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எந்த வேளையிலும் தமது அமைப்பு தயாராகவுள்ளதாகவும், பொத்துவில் ஹுதா அமைப்பின் தலைவர் சம்சுல் ஹுதா தெரிவித்தார்.

## திருகோணமலை கடலில் கழிவுகள் அகற்றும் திட்டம்



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை நகரக் கடலில் முதல் தடவையாக கழிவுகளை அகற்றும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) முன்னெடுக்கப்பட்டது.

*Trinco Aid* இன் ஏற்பாட்டிலும் *Yana Foundation* இல் பங்கு கொண்ட நீச்சல், சுழியோடி மாணவர்களின் ஒத்துழைப்புடனும் *Lions' Club of Centennial Paradise* ஆதரவுடனும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆழ்கடலிலிருந்து பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் போத்தல்கள், மதுபானப் போத்தல்கள், இரும்புப் பொருட்கள் உள்ளிட்ட கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டன.

அத்துடன், திருகோணமலை நகரக் கடற்கரையும் சுத்தம் செய்யப்பட்டது.

## உலக வாய்ச் சுகாதார தினம்; மட்டக்களப்பில் பேரணிகள்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

உலக வாய்ச் சுகாதார தினத்தையொட்டி சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையும் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் பேரணிகள், மட்டக்களப்பு நகரில் நேற்று திங்கட்கிழமை (20) காலை நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் முன்பாக ஒரு பேரணியும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முன்பாக மற்றொரு பேரணியும் ஆரம்பமாகியதுடன், அவை மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து, அப்பஸ் தரிப்பு நிலையத்திலிருந்த சாரதிகளுக்கு வாய்ச் சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் எம்.சுகுணன், மாவட்ட பல் வைத்திய அதிகாரி எஸ்.முரளீதரன் உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டு தமது சேவையை வழங்கினர்.

## மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகள்

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

அக்கரைப்பற்று மாநகரசபை எல்லையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அக்கரைப்பற்று மாநகர சபையினால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர சபையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கவனத்திற்கொண்ட அக்கரைப்பற்று மாநகர சபை இம்மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தது. அம்மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் சகியினால் சுமார் 35 இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள், 16 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிபர்கள் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

அந்தந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர் குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்தக் கொப்பிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## மருதமுனையில் குர்ஆன் பிரதிகள் இலவசமாக வழங்கிவைப்பு

பெரியநீலாவணை விசேட நிருபர்



மருதமுனை மஸ்ஜித்துல் மக்பூலியா ஜும்மா பள்ளிவாசலில் இயங்கும் ஹிபுல் மதரஸா மாணவர்களுக்கு குர்ஆன் பிரதிகளை பைத்துல் ஹெல்ப் அமைப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) இலவசமாக வழங்கி வைத்தது.

இலங்கை பைத்துல் ஹெல்ப் அமைப்பின் பிரதானி ரைஸுல் ஹக்கீம், மதரஸா மாணவர்களின் நலன் கருதி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

அரசாங்கக் காரியாலயங்கள், பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவசமாக குடிநீர் வழங்குதல், மாணவர்களின் கல்விக்குக் கைகொடுத்தல் உள்ளிட்ட சமூகநல வேலைத்திட்டங்களை பைத்துல் ஹெல்ப் அமைப்பு மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அன்வாருள் உழும் அரபுக் கல்லூரியின் 20வது நிறைவும் பட்டமளிப்பு விழாவும்

கந்தளாய் தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அன்வாருள் உழும் அரபுக் கல்லூரியின் 20ஆவது ஆண்டு நிறைவும் முதலாவது அல் ஹாபிழ், அல் ஆலிம் மற்றும் ஆலிமாக்களுக்கான பட்டமளிப்பு விழாவும் மேற்படி அரபுக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றன.

அன்வாருள் உழும் ஆண்கள் அரபுக் கல்லூரி மற்றும் தாஜூனிஸா பெண்கள் அரபுக் கல்லூரிகளிலிருந்து முதலாவது முறையாக அல் ஹாபிழ், அல் ஆலிம் மற்றும் ஆலிமாக்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு 11 அல் ஹாபிழ்களும் 10 அல் ஆலிம்களும் 14 ஆலிமாக்களுக்குமான பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் அஷ் ஷேஹ் அல் ஆலிம் எம்.ஐ. எம்.ரிஸ்வி முப்தி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் உப தலைவர் அஷ் ஷேஹ் அல் ஆலிம் எம்.எச்.எம்.உமர்தீன் ரஹ்மான், கண்டி முர்த்தலாவ மழாஹிருள் அரபுக் கல்லூரிப் பணிப்பாளர் அஷ் ஷேஹ் அல் ஆலிம் எஸ்.எல்.எம். ரபியுதீன் ஆகியோர் கௌரவிக்கப் பட்டனர்.

## போதைப் பாவனைக்கு எதிரான சைக்கிள் பவனி கல்லடியில் நிறைவு



புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி குறூப் நிருபர்கள்

போதைப்பொருள் பாவனையையும் மதுபானப் பாவனையையும் தடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் பவனி, மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) நிறைவடைந்தது.

விமோச்சனா இல்லத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சைக்கிள் பவனியில், மேற்படி இல்லத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு நிதானமான வாழ்வில் இணைந்தவர்களே கலந்து கொண்டனர்.

இதன்போது, 50 அடி நீளமான தேசிய கொடியை காட்சிப்படுத்தி சமாதானத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் மதுபானப் பாவனைக்கு அடிமையாகின்றவர்களை அவற்றிலிருந்து விடுதலையளிக்கும் சேவையை கடந்த 13 வருடங்களாக விமோச்சனா இல்லம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குருதிக்கொடையாளர் சம்மேளனம் காத்தான்குடியில் உருவாக்கம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் குருதிக் கொடையாளர்கள் சம்மேளனமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இதற்கான கூட்டம், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதி பெற்றுக்கொள்ளும் வகையில் குருதித் தானத்தை ஊக்குவித்து, குருதிக் கொடையாளர்களை ஒருங்கமைக்கும் வகையில் இந்தச் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த குருதிக் கொடையாளர்கள் சம்மேளனத்தின் தலைவராக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு பொறுப்பான வைத்தியர் அலீமா ரஹ்மானும் உப தலைவராக நிஸ்பரும் செயலாளராக சமூக செயற்பாட்டாளர் பாயிஸூம் பொருளாளராக பிளாலும் உட்பட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர், வைத்தியர் எம்.எஸ்.எம்.ஜாபீர், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு பொறுப்பான வைத்தியர் அலீமா ரஹ்மான் உட்பட தாதியர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இஸ்லாமிய மகளிர் ஒன்றிய ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் நடத்திய சர்வதேச மகளிர் தின வைபவம் கடந்த சனிக்கிழமை காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்த மகளிர் தின வைபவத்தில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி னூசியா சேனாதிராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இதன்போது, அதிதிகள் நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், பெண்களின் கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

மேலும், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள், அவர்களின் உடைமைகளை வைத்துக்கொள்வதற்கான பெட்டிகளும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி, வைத்தியர் அலீமா ரஹ்மானிடம் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் ஒப்படைத்தார்.

ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம், காத்தான்குடிப் பெண்களை மையப்படுத்தி அவர்களை மேம்படுத்தும் பல்வேறு வேலைத்திட்டங்களை




பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது.

# இன்னிங்ஸ் தோல்வியுடன் தொடரை முழுவதும் இழந்தது இலங்கை அணி






நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி இரு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரையும் 0–2 என முழுமையாக இழந்தது.

வெளிங்டனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று (20) இன்னிங்ஸ் தோல்வியை தடுக்கும் கடும் சவாலோடு தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி மத்திய வரிசை வீரர்கள் நிதானமாக ஆடியபோதும் அது தோல்வியை தவிர்க்க போதுமாக அமையவில்லை.

கேன் வில்லியம்சன் (215) மற்றும் ஹென்ரி நிகோல்ஸின் (ஆட்டமிழக்காது 200) இரட்டைச் சதம் மூலம் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸுக்கு 580 ஓட்டங்களை பெற்ற நிலையில் இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் 164 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இந்நிலையில் இரண்டாவது இன்னிஸுக்கு பலோ ஒன் செய்த இலங்கை அணி 113 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையிலேயே நேற்றைய ஆட்டத்தை தொடர்ந்து.

எனினும் நான்காவது நாள் ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே 50 ஓட்டங்களை பெற்றிருந்த குசல் மெண்டிஸ் ஆட்டமிழந்தார். அதேபோன்று ஒரு ஓட்டத்துடன் நேற்றைய நாளை ஆரம்பித்த அஞ்சலோ மத்தியூஸ் மேலும் ஒரு ஓட்டத்தை பெற்று வெளியேறினார்.

இந்நிலையில் தினேஷ் சந்திமால் மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் நிதானமாக ஆடி 126 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். எனினும் சந்திமால் 62 ஓட்டங்களோடு ஆட்டமிழந்த நிலையில் களமிறங்கிய தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடிய நிஷான் மதுஷ்கவினால் 39 ஓட்டங்களையே பெற முடிந்தது.

தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் 3000 ஓட்டங்களை கடந்து சதத்தை நெருங்கிய தனஞ்சய டி சில்வா 98 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அவரது ஆட்டமிழப்பை அடுத்து இலங்கை அணியின் இன்னிங்ஸ் தோல்வியை தடுக்கும் கடைசி எதிர்பார்ப்பும் சிதறியது. இலங்கை அணியின் கடைசி நான்கு விக்கெட்டுகளும் 40 ஓட்டங்களும் பறிபோனது.

இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 142 ஓவர்களில் 358 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு தேவையான 416 ஓட்டங்களை எட்ட முடியாமல்போனது.

இலங்கை அடுத்து நியூசிலாந்துடன் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி வரும் மார்ச் 25ஆம் திகதி ஒக்லாந்தில் நடைபெறவுள்ளது.

# இலங்கைக்கு ஐந்தாவது இடம்



நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தோல்வியை சந்தித்த இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது.

2021–23 காலத்திற்கான உலக டெஸ்ட் சம்பியன்சிப் வரிசை இறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் இரு இடங்களை பிடித்திருக்கும் அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் வரும் ஜுன் மாதம் ஓவலில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் ஆடவுள்ளன.

இதில் தென்னாபிரிக்க அணி மூன்றாவது இடத்தை பிடித்ததோடு இங்கிலாந்து அணி நான்காவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் நியூசிலாந்து அணி 6 ஆவது இடத்திற்கு முன்னெற்றம் கண்டது.

# டெஸ்ட் தலைமையிலிருந்து விலக கருணாரத்ன முடிவு



இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அயர்லாந்து சுற்றுப்பயணத்திற்குப் பின்னர் டெஸ்ட் அணித் தலைமை பதவியில் இருந்து விலகுவது பற்றி இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார்.

“புதிய டெஸ்ட் பருவத்திற்கு புதிய அணித்தலைவர் ஒருவரை நியமிப்பது நல்லது என்று தேர்வுக் குழுவினருக்கு அறிவித்தேன். எனவே அயர்லாந்து தொடருக்கு பின்னர் பதவி விலக நான் தயாராக உள்ளேன்” என்று கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

“எனது முடிவு பற்றி தேர்வாளர்களின் நிலைப்பாடு குறித்து எனக்கு இன்னும் தெரியவரவில்லை. ஆனால் புதிய டெஸ்ட் பருவத்தின் நடுவே நான் தலைமை பொறுப்பில் இருந்து விலகுவதை விட அதன் ஆரம்பம் தொடக்கம் புதிய தலைவர் ஒருவருக்கு பொறுப்பு வழங்குவது நல்லது என நான் உணர்கிறேன்” என்று நியூசிலாந்துக்கு எதிராக நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருணாரத்ன குறிப்பிட்டார்.

தினேஷ் சந்திமாலுக்கு பதில் 2019 ஆம் ஆண்டு பதில் தலைவராக முதல் முறை நியமிக்கப்பட்ட 34 வயதான கருணாரத்ன, முதல் தொடரிலேயே தென்னாபிரிக்காவுக்கு எதிரான வரலாற்று வெற்றியை பெற்றது. கருணாரத்னவின் தலைமையில் இலங்கை அணி 26 டெஸ்ட் போட்டிகளில் 10 இல் தோற்று ஒன்பது ஆட்டங்களை சமன் செய்ததோடு ஏழு போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. வரும் ஏப்ரலில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அயர்லாந்து அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது.

# விசேட பயிற்சியாளராக இணைகிறார் கண்டம்பி



நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் திலின கண்டம்பி விசேட பயிற்சியாளராக இலங்கை அணியுடன் இணைந்துள்ளார்.

லாங்கா பிரீமியர் லீக்கில் யாழ்ப்பாண அணியின் பயிற்சியாளரான கண்டம்பி அந்த அணி தொடர்ச்சியாக மூன்று முறை சம்பியன் கிண்ணத்தை வெல்ல உதவியதோடு தற்போது இலங்கை ஏ அணியின் பயிற்சியாளராக செயற்படுகிறார்.

நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்த இலங்கை அணி அடுத்து நியூசிலாந்துடன் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி வரும் மார்ச் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# அமெரிக்க டி20 தொடரில் இலங்கையின் 4 வீரர்கள்



அமெரிக்காவில் முதன்முறையாக நடைபெறவுள்ள மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் இலங்கையைச் சேர்ந்த நான்கு வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆறு அணிகள் பங்கேற்கும் இந்த டி20 தொடரில் வொசிங்டன் பிரீடம் அணிக்கு ஆட வனிந்து ஹசரங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். தவிர, செஹான் ஜயசூரிய, அஞ்சலோ பெரேரா ஆகியோர் சீட்ல் ஓர்கஸ் அணியில் இடம்பிடித்துள்ளதுடன், லஹிரு மிலந்த, டெம் டெக்சஸ் அணியில் இடம்பெற்றுள்ளார்.

மேஜர் லீக் கிரிக்கெட் தொடர் வரும் ஜுலை மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்கேற்கும் ஆறு அணிகளில் நான்கு அணிகளை இந்திய பிரீமியர் லீக் உரிமையாளர்கள் வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சபா இல்லம் வெற்றி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை சம்பு நகர் அக்/ அல்–மினா வித்தியாலயத்தின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டியில் சபா இல்லம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (17) மாலை நடைபெற்ற இறுதி நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம். றஹ்மத்துல்லா, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. அஹமட் சாபிர், பிரதான அனுசரணையாளர் அனீஸ் மோல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ. அனீஸ் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சபா, மறுவா, மினா இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் இரண்டாமிடத்தினை மறுவா இல்லம் வென்றது.

# இம்ரான் கானுக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அவரது 17 உதவியாளர்கள் மற்றும் பல டஜன் ஆதரவாளர்கள் மீது அந்நாட்டு பொலிஸார் கடந்த ஞாயிறன்று (19) பயங்கரவாதம் மற்றும் வேறு குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளனர்.

இம்ரான் கான் ஆதரவாளர்கள் மற்றும் பொலிஸார் இடையே நீதிமன்றத்திற்கு முன்னால் மோதலில் ஈடுபட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்போது கான் ஆதரவாளர்கள் பெற்றோல் குண்டுகள் மற்றும் கற்களை வீசி தாக்கியதை அடுத்து கலகமடக்கும் பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதேவேளை இம்ரான் கானின் தஹ்ரிக்கே இன்சாப் கட்சிக்கு தடை விதிக்க அரசு ஆலோசித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ராணா சனாவுல்லா இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான் வீட்டில் நடந்த சோதனையில் அங்கிருந்த ஆயுதங்கள், பெட்ரோல் குண்டுகள் உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்ட நிலையில், அவரது கட்சிக்கு தடை விதிப்பது குறித்து சட்டக் குழுவினருடன் அரசு ஆலோசனை நடத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாலைதீவில் தூதரகம் திறக்க அமெ. திட்டம்



மாலைதீவு மற்றும் பசுபிக் தீவுகளான டொங்கா மற்றும் கிரிபட்டி ஆகியவற்றில் புதிதாகத் தூதரகங்களை திறப்பதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அமெரிக்காவின் கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான உதவி வெளியுறவு செயலாளர் டேனியல் கிரிடென் பிரிங்க் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் கிழக்கு மேற்கு மைய சிந்தனைக் குழுமத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இந்து–பசுபிக் பிராந்தியத்தை அமெரிக்கா அதன் ஒட்டுமொத்த இராஜதந்திர மூலோபாயத்தின் மையமாகக் கருதுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக சொலமன் தீவுகளில் புதிய தூதரகத்தைத் திறந்து வைத்த பின், பசுபிக் தீவு நாடுகளில் எமது இராஜதந்திர செயற்பாடுகளை விரிவாக முன்னெடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

## சர்வதேச செய்திகள்

# ஈரான் ஜனாதிபதிக்கு சவூதி அழைப்பு



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றுக்கு சவூதி அரேபியா அழைப்பு விடுத்திருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது. இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை மீள ஆரம்பிக்க இணங்கி ஒரு வாரம் கடந்த நிலையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சவூதி மன்னர் சல்மானிடம் இருந்து வந்த கடிதத்திலேயே இந்த அழைப்பு வந்திருப்பதாக கூறப்பட்டபோதும், இது தொடர்பில் சவூதி இன்னும் உறுதி செய்யவில்லை.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் போக்கே அண்மைய வரலாற்றில் மத்திய கிழக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

சீனாவின் மத்தியஸ்தத்தில் இந்த இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை மீள ஆரம்பிக்க இணங்கி இருப்பது பிராந்தியத்தின் பூகோள அரசியலில் பெரும் திருப்பமாக மாற வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் மூத்த ஈரானிய அதிகாரி ஒருவரான முஹமது ஜம்ஷிதி, சவூதி அரேபியாவில் இருந்து வந்த அழைப்பு தொடர்பில் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். அதில் ரைசிக்கு சவூதி அழைப்பு விடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதோடு, ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஈரான் தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளது.

இதேநேரம் இரு நாடுகளும் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த இணங்கி இருப்பதாகவும் அந்த சந்திப்புக்கு மூன்று சாத்தியமான இடங்கள் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகவும் ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹொஸைன் ஆமிர் அப்தொல்லாஹியான் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார். எனினும் குறிப்பிட்ட அந்த இடங்கள் மற்றும் பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கான திகதி பற்றி அவர் எந்த விபரமும் வெளியிடவில்லை.

சீனாவின் மத்தியஸ்தத்தில் அண்மையில் நடந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரு மாதங்களுக்கு பரஸ்பரம் தூதரகங்களை திறப்பதற்கும் வர்த்தக மற்றும் பாதுகாப்பு உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் இரு நாடுகளும் இணங்கின.

ஷியா மதத் தலைவர் ஒருவருக்கு சவூதி மரண தண்டனை நிறைவேற்றிய நிலையில், 2016 ஆம் ஆண்டு டெஹ்ரானில் உள்ள தூதரகத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே ஈரானுடனான இராஜதந்திர உறவுகளை சவூதி துண்டித்தமை குறிப்பிடத்தக்கது.

சிரியா மற்றும் யெமன் உள்நாட்டுப் போர் உட்பட பல்வேறு பிராந்திய பிரச்சினைகளில் ஷியா பெரும்பான்மை ஈரான் மற்றும் முக்கிய சுன்னி நாடான சவூதி அரேபியா எதிர் தரப்புகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.